# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

06 NOVEMBER 2022 - SUNDAY

Pages - 13

E Paper - # 014 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK

E-mail: editor@newsplus.lk


## மீண்டும் எழுவோம் கம்பஹாவில் இல்லை!

### ஐ.தே.க.வுடன் கூட்டணி

### பிரசன்ன அதிரடி



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை

02 »»

# இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு உடன் முடிவு கட்டவும்

## மனித உரிமை ஆணைக்குழு அறிக்கை

பலஸ்தீன் மற்றும் சிரிய பிரதேசங்களில் கடந்த 55 வருட காலமாக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பினை முடிவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையினை மேற்கொள்வதன் அவசியத்தினையும், இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்களை குற்றமென கருதி சர்வதேச நீதிமன்றத்துக்கு நிரூபிக்க வேண்டுமென்றும் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு நியமித்த சுதந்திர ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளது.

தென்னாபிரிக்க நவநீதம்பிள்ளை இந்தியாவின் மிலுவன் கொதாரி, அவுஸ்திரேயாவின் கிரிஸ்தோபர் சிடோட் ஆகிய மூவரும் அடங்கிய குழுவே இந்த சிபாரிசை செய்துள்ளது. மனித உரிமை ஆணைக்குழுவின் 15 ஆவது அமர்வுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே தூதுக்குழு இச்சிபாரிசுகளை செய்துள்ளது.

02 »»

UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

## இம்ரானின் செய்திகளை ஒளிபரப்ப தடை

பலஸ்தீன் மற்றும் சிரிய பிரதேசங்களில் கடந்த 55 வருட காலமாக ,ஸ்ரேல் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பினை முடிவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையினை மேற்கொள்வதன்

02 »»

## ஐ.நா. செயலாளருடன் ஜனாதிபதி சந்திப்பு



எகிப்தின் கெய்ரோவைச் சென்றடைந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அங்கே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸை

02 »»

## மலேசிய பொதுத் தேர்தலில் நூறு வயது மஹதிர் போட்டி



அடுத்த மாதம் மலேசியாவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 100 வயதினை உடைய இராஜதந்திரியான மலேசியாவின் முன்னாள் பிரதமர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு தனது 97 வயதில் பிரதமராக மீண்டும் தெரிவான இவர், இம்முறையும் தேர்லில்

02 »»

## உள்ளூராட்சி மன்ற பிரிப்புக்கு மீண்டும் குழு நியமனம்

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை வகுப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர்

02 »»

## அநாதை சொத்தை அபகரிக்காதே: மல்வானையில் எதிர்ப்பு பேரணி





மல்வானை அநாதை நிலையம் (யதாமா பாடசாலை) மூடப்பட்டுள்ள நிலையில் அதன் பழைய மாணவர் சங்கம் இன்றைய தினம் (06) விழிப்புணர்வு பேரணியொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

குறித்த பேரணியானது மல்வானை அல்முபாரக் தேசிய பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடி யதாமா பாடசாலையை நோக்கி சென்றுள்ளது.

குறித்த பேரணி தொடர்பில் மாகொல, மல்வான முஸ்லிம் அநாதை நிலையத்தின், பழைய மாணவர் சங்கம் ஏற்கனவே விடுத்திருந்த

02 »»

## குற்றம் நிரூபிக்கப்பட்டால் தனுஷ்கவுக்கு 14 வருட சிறை



இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவின் குற்றம்

02 »»

## 22 ஆயிரம் ஆசிரியர்கள் அடுத்தாண்டு நியமனம்

அரசாங்க பாடசாலைகளில் உள்ள 32 ஆயிரம் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக கல்வியமைச்சு போட்டிப் பரீட்சையை நடாத்தவுள்ளது.

அடுத்தாண்டு ஓய்வுபெறும் 10 ஆயிரம் ஆசிரியர்களுடன் இந்த வெற்றிடங்கள்

02 »»

## ஜனநாயக வழிகளில் அதிருப்தியை காட்டுங்கள்

### முஸ்லிம்களுக்கு எம்.எம்.டி.ஏ. அழைப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முன்னாள் நீதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவினுடைய அறிக்கை மீதான அதிருப்தியினை சமூகமாக வெளிப்படுத்த வேண்டிய அவசியம் உணரப்பட்டிருப்பதால் காலம்

02 »»

## எல்லை நிர்ணய ஆணைக்குழுவில் ஹமீட் நியமனம்

எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு சம்மாந்துறையைச் சேர்ந்த ஐ.ஏ. ஹமீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன்பு ஹபிடாட் அமைப்பில் பணிபுரிந்துள்ளார். முன்னாள் தேர்தல் ஆணைக்குழுவின்

02 »»

## மு.கா. பேராளர் மாநாடு திங்களன்று புத்தளத்தில்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 30ஆவது பேராளர் மாநாடு

02 »»

## குவைத் ஸகாத் நிதியுதவியினால் எருக்கலம்பிட்டியில் வீடுகள் கையளிப்பு

யுத்தத்திற்கு பிற்பாடு மீளக் குடியேறியுள்ள மக்களுக்கான வீட்டுத் திட்டமானது பூரணத்துவம் அடையாத நிலையில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் கோரிக்கைக்கு அமைய குவைட் நாட்டின் ஸகாத் ஹவுஸின் (Zakath House) நிதியுதவியோடு ஐளுகூஊ நிறுவனத்தின் அனுசரணையில் எருக்கலம்பிட்டி ஸகாத் பவுண்டேசனினின் Zakath Foundation) பூரண ஒத்துழைப்புடன் மன்னார் மாவட்டத்தின் எருக்கலம்பிட்டி கிராமத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள 200 வீடுகளை கொண்ட வீட்டுத்திட்ட செயற்றிட்டத்துக்கு அமைய முதற்கட்டமாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 75 வீடுகளை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சர் கௌரவ பிரசன்ன

02 »»



## முதல் அரையிறுதியில் பாக். நியூசிலாந்து மோதல்

(ரிஹ்மி ஹக்கீம்)

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் டி20 உலகக்கிண்ண கிரிக்கட் போட்டித்தொடரின்

02 »»

Collaborate with...

SIYANE NEWS

www.siyanenews.com | facebook.com/Siyanemediacircle | twitter.com/SivaneNews | Siyane Media Circle

SIYANE MEDIA CIRCLE (PVT) LTD    No. 41, Kahatowita, Veyangoda.

SIYANE MEDIA CIRCLE
KAHATOWITA
GA 00213489
மாற்றத்தை நோக்கிய பயணம்

## அநாதை..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அறிக்கையில்,

"60 வருடங்களை பூர்த்தி செய்துள்ள இலங்கை முஸ்லிம்களின் ஆரம்ப கால அநாதை நிலையங்களான மாகொல முஸ்லிம் அநாதை நிலையம் மற்றும் அதன் கிளையான மல்வானை அநாதை நிலையம் ஆகியன சுமார் 800 இற்கும் மேற்பட்ட அநாதைகளைக் கொண்டுள்ளன.

இந்த அநாதை நிலையங்கள் முன்னாள் ஆரம்ப கால நிலையான பரிபாலன சபைத் தலைவர் மர்ஹூம் ஜாபீர் ஹாஜியாரின் தலைமையில் கல்வி, மார்க்கக் கல்வி, கைத்தொழில் பாடநெறி கற்கைகளுடன் தூரநோக்குடையதாக சீரும் சிறப்புடன் இயங்கி வந்தன.

கடந்த 2008 இல் ஜாபீர் ஹாஜியாரின் மறைவுக்குப் பிறகு பரிபாலன சபையில் உள்ள தலைவர் உள்ளிட்ட சில உறுப்பினர்களின் அசமந்தப் போக்கான செயற்பாடுகள் காரணமாக, தூரநோக்கற்றதாக, கல்வி, மார்க்கக் கல்வி, கைத்தொழில் பாடநெறி கற்கைகள் உள்ளிட்ட செயற்பாடுகள் சீர் குலைந்தமை காரணமாக அதிலிருந்த பிள்ளைகள் விலக ஆரம்பித்தனர்.

அந்த வகையில் இன்று மல்வானை அநாதை நிலையம் மூடப்பட வேண்டிய பரிதாபகரமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பல மில்லியன் ரூபா நன்கொடைகள் மூலம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்நிலையம், பரிபாலன சபையினரின் அசமந்தப் போக்கு காரணமாக இந்நிலையத்தை 3ஆம் தரப்புக்கு தாரைவார்க்கும் வந்துள்ளது.

அந்த வகையில் இன்று எந்தவிதமான சட்டரீதியான அணுகுமுறைகளும் இன்றி, பத்திரிகை மூலமான முறையான பொது அறிவித்தல்களும் இன்றி அதனை விற்பனை செய்வதற்கும், கூலிக்கு வழங்குவதற்குமென, தமது சொந்த பொக்கற்றுகளை நிரப்பும் வகையில் செயற்படுகின்ற நிலைக்கு வந்துள்ளது.

அநாதைகளின் சொத்துகளில் அத்து மீறுகின்ற மார்க்கத்தில் தடுக்கப்பட்ட ஹறாமான நடவடிக்கைக்கு சென்றுள்ள இவ்வாறானவர்களின் செயற்பாடுகளுக்கு, எமது விரோதத்தை தெரிவிக்கும் முகமாக இந்த அநாதை நிலையத்தின் பழைய மாணவர்கள் சங்கம் உள்ளிட்ட சமூக கடமைப்பாடு கொண்ட இளைஞர்கள் ஒன்றிணைந்துள்ளனர்.

அதற்கமைய, இதன் தற்போதைய பரிபாலனசபை உடனடியாக விலகி சட்டரீதியான புதியதொரு பரிபாலன சபையை உருவாக்கி முன்னர் காணப்பட்ட தூரநோக்குடன் கல்வி, மார்க்கக் கல்வி, தொழில் முறைக் கல்வி உள்ளிட்ட செயற்பாடுகள் மூலம் அதனை கட்டியெழுப்ப, நாட்டின் சகல முஸ்லிம்களுக்கும் இது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகளை பழைய மாணவர்கள் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

அநாதை பிள்ளைகள் விடயத்தில் கூடிய கவனம் எடுத்து, மர்ஹூம் ஜாபீர் ஹாஜியாரின் மறைவுக்கு முன்னர் இருந்தாற் போல், இந்நிலையத்தைக் கட்டியெழுப்புமாறும், கடந்த 10 வருட காலமாக பரிபாலன சபையின் அசமந்தப் போக்கை நிறைவுக்கு கொண்டு வருமாறும் பழைய மாணவர் சங்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், இச்சபை இது தொடர்பில் எவ்வித அக்கறையும் இன்றி செயற்பட்டதன் காரணமாக இந்நிலையம் இன்று மூடப்பட வேண்டிய பரிதாபகரமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

## 22 ஆயிரம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பட்டுள்ளன. ஏற்கனவே 22 ஆயிரம் ஆசிரிய வெற்றிடங்கள் இருக்கின்ற நிலையிலேயே புதிய ஓய்வூதிய வயது எல்லை காரணமாக 10 ஆசிரியர்கள் ஓய்வு பெறுகிறார்கள்.

அடுத்த மாதம் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான பட்டதாரிகளிடையே போட்டிப் பரீட்சை நடைபெறும். தற்போது பாடசாலைகளில் பணிபுரியும் அபிவிருத்தி உதவியாளர்கள், அரசதுறையில் பணிபுரியும் பட்டதாரிகளுக்கு இந்தப் பரீட்சையில் தோற்றலாம். இந்த நியமங்களை மேற்கொள்வதற்காக பொதுச் சேவை ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியிருப்பதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படும் ஆசிரியர்கள் ஒரு வருட டிப்ளோமா பயிற்சியை பெறவேண்டும்.

அடுத்தாண்டு மார்ச் மாதம் முதல் இவர்கள் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவார்கள். 2023 ஜனவரியில் ஓய்வுபெறும் 10 ஆயிரம் ஆசிரியர்களில் 7 ஆயிரம் வர்த்தக, விஞ்ஞான, கணித ஆசிரியர்கள் என்று கல்வியமைச்சு தெரிவித்தது.

## மு.கா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இன்று (7), திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு புத்தளம், கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ள இம் மாநாட்டில், நாடெங்கிலுமிருந்து கட்சியின் பேராளர்கள் கலந்து கொள்வர்.

இதேநேரம் நேற்று (6) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில், கட்சியின் "தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் முஸ்லிம் காங்கிரஸின் கட்டாய உயர்பீடக்கூட்டம் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 30ஃ1 பிரேரணையின் கீழ் மனித உரிமை ஆணைக்குழு கிழக்கு ஜெரூலசம் உட்பட பலவந்தமாகக் கைப்பற்றப்பட்டுள்ள பலஸ்தீன நிஜபூமி மற்றும் இஸ்ரேலுக்குள் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இந்தக் குழுவை நியமித்தது. இக்குழு சமர்ப்பித்துள்ள முதலாவது அறிக்கையில் இஸ்ரேல் பலவந்தமாக கைப்பற்றபட்டுள்ள பிரதேசங்களை கைவிடுவதற்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை என்பதற்கு போதிய சாட்சியங்கள் இருப்பதாக தெரிவித்துள்ளது. பலஸ்தீனர்களை தொந்தரவுக்குள்ளாக்கும், இஸ்ரேல் குடியேற்றக்காரர்களுக்கு சாதமான கொள்கையை இஸ்ரேல் தொடர்ந்து பின்பற்றுவதாகவும் இந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேல் 1967 இல் இருந்து கிழக்கு ஜெரூஸலத்தில் தமது சட்டத்தை அமுல்படுத்துவதோடு பலஸ்தீன நிஜபூமியை கையேற்று இஸ்ரேலிய குடியேற்றங்களை வியாபிக்க நடவடிக்கை எடுத்து வருவதாவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேல் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக கிழக்கு ஜெரூஸ லத்தில் 3ஃ2 பகுதிக்கு மேற்பட்ட பிரதேசங்களை கைப்பற்றியுள்ளதோடு, பலஸ்தீனர்களுக்கு நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு 3-1 பங்கு பிரதேசமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் தமது சட்டம் மற்றும் கொள்கைகள் மூலம் பலஸ்தீனர்களை அகற்றி தொடராக இஸ்ரேலிய குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றன என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1967 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கோலான் பிரதேசத்தில் வாழ்ந்த 90 ஆயிரம் சிரிய நாட்டவர்கள் இப்போது 6396ஆகக் குறைந்துள்ளதாவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தினர்களுக்குரிய பூமியை கைப்பற்றியும், இணைத்தும் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் சர்வதேச சட்டப்படி குற்றச்செயலாக உள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா. பொதுச் சபை இஸ்ரேல் தொடர்பான கோரிக்கைகளை நிராகரிப்பது குறித்து சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனை பெறப்படவேண்டுமென்றும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பலஸ்தீனர்கள் எதிர்கொள்ளும் இந்த அவல நிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், இஸ்ரேல் குடியேற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்காக இந்த அறிக்கையை பாதுகாப்பு கவுன்சிலுக்கு சமர்ப்பிக்கவேண்டுமென்றும் தூதுக்குழு அதன் அறிக்கையில் கேட்டுள்ளது.

பலவந்தமாக கையேற்றுள்ள பலஸ்தீன நிஜபூமி தொடர்பான விசாரணைகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு சிபாரிசு செய்வதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## உள்ளூராட்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த தேசப்பிரிய தலைமையில் ஐவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் அங்கத்தவர்களாக ஐ.ஏ.ஹமீட், கே.தவலிங்கம், ஜயலத் டி திசாநாயக்க, டபிள்யூ. எம்.எம்.ஆர்.அதிகாரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவின் பதவிக்காலம் நவம்பர் முதலாம் திகதியிலிருந்து 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை என வர்த்தானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்ற அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தன இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதேநேரம் இக்குழு நியமனம் தேர்தலை ஒத்திப்போடுவதற்கான ஒரு முயற்சியே என எதிரிக்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

## மலேசிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

போட்டியிடுகிறார். 100 வயதாக இருந்தாலும் தேக ஆரோக்கியமிக்கவராக இவர் காணப்படுவதாக மலேசியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மலேசிய பாராளுமன்றத்திற்கு இன்னும் 10 மாதங்கள் பதவிக்காலங்கள் இருக்கின்ற நிலையில் பிரதமர் சபீர் யஹ்கூப் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கு அழைப்பு விடுத்துள்ளார். தனக்கு இத்தேர்தலில் வெற்றிபெற்று சாதகங்கள் நிறைய இருப்பதாக நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்த பின் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

## இம்ரானின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அவசியத்தினையும், ,ஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்களை குற்றமென கருதி சர்வதேச நீதிமன்றத்துக்கு நிரூபிக்க வேண்டுமென்றும் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு நியமித்த சுதந்திர ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளது.

தென்னாபிரிக்க நவநீதம்பிள்ளை ,ந்தியாவின் மிலுவன் கொதாரி, அவுஸ்திரேயாவின் கிரிஸ்தோபர் சிடோட் ஆகிய மூவரும் அடங்கிய குழுவே ,ந்த சிபாரிசை செய்துள்ளது. மனித உரிமை ஆணைக்குழுவின் 15 ஆவது அமர்வுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே தூ துக்குழு ,ச்சிபாரிசுகளை செய்துள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 30ஃ1 பிரேரணையின் கீழ் மனித உரிமை ஆணைக்குழு கிழக்கு ஜெரூலசம் உட்பட பலவந்தமாகக் கைப்பற்றப்பட்டுள்ள பலஸ்தீன நிஜபூமி மற்றும் ,ஸ்ரேலுக்குள் ,டம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ,ந்தக் குழுவை நியமித்தது. ,க்குழு சமர்ப்பித்துள்ள முதலாவது அறிக்கையில் ,ஸ்ரேல் பலவந்தமாக கைப்பற்றபட்டுள்ள பிரதேசங்களை கைவிடுவதற்கு எந்தவித எதிர்பார்ப்பும் ,ல்லை என்பதற்கு போதிய சாட்சியங்கள் ,ருப்பதாக தெரிவித்துள்ளது. பலஸ்தீனர்களை தொந்தரவுக்குள்ளாக்கும், ,ஸ்ரேல் குடியேற்றக்காரர்களுக்கு சாதமான கொள்கையை ,ஸ்ரேல் தொடர்ந்து பின்பற்றுவதாகவும் ,ந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

,ஸ்ரேல் 1967 ,ல் ,ருந்து கிழக்கு ஜெரூஸலத்தில் தமது சட்டத்தை அமுல்படுத்துவதோடு பலஸ்தீன நிஜபூமியை கையேற்று ,ஸ்ரேலிய குடியேற்றங்களை வியாபிக்க நடவடிக்கை எடுத்து வருவதாவும் ,ந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

,ஸ்ரேல் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக கிழக்கு ஜெரூஸ லத்தில் 3ஃ2 பகுதிக்கு மேற்பட்ட பிரதேசங்களை கைப்பற்றியுள்ளதோடு, பலஸ்தீனர்களுக்கு நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு 3-1 பங்கு பிரதேசமே ஒதுக்கப்பட்டுள்ளது.

,ஸ்ரேல் தமது சட்டம் மற்றும் கொள்கைகள் மூலம் பலஸ்தீனர்களை அகற்றி தொடராக ,ஸ்ரேலிய குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றன என்றும் ,ந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1967 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கோலான் பிரதேசத்தில் வாழ்ந்த 90 ஆயிரம் சிரிய நாட்டவர்கள் ,ப்போது 6396ஆகக் குறைந்துள்ளதாவும் ,ந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தினர்களுக்குரிய பூமியை கைப்பற்றியும், ,ணைத்தும் ,ஸ்ரேல் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் சர்வதேச சட்டப்படி குற்றச்செயலாக உள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா. பொதுச் சபை ,ஸ்ரேல் தொடர்பான கோரிக்கைகளை நிராகரிப்பது குறித்து சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனை பெறப்படவேண்டுமென்றும் ,ந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பலஸ்தீனர்கள் எதிர்கொள்ளும் ,ந்த அவல நிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், ,ஸ்ரேல் குடியேற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்காக ,ந்த அறிக்கையை பாதுகாப்பு கவுன்சிலுக்கு சமர்ப்பிக்கவேண்டுமென்றும் தூதுக்குழு அதன் அறிக்கையில் கேட்டுள்ளது.

பலவந்தமாக கையேற்றுள்ள பலஸ்தீன நிஜபூமி தொடர்பான விசாரணைகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு சிபாரிசு செய்வதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## மீண்டும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முன்னிலைப்படுத்தி "மீண்டும் எழுவோம்" கூட்டத்தை டிசம்பர் மாதத்தில் கம்பஹா மாவட்டத்தில் நடாத்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த கூட்டத்தை நடாத்த இடமளிக்க முடியாது என ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணி அமைத்து எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் போட்டியிடுவோம். இனி வரும் காலங்களில் எந்த கட்சியும் தனித்து ஆட்சியமைக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொண்டிருந்தால் சட்டமூலத்திற்கு ஆதரவாகவே வாக்களித்திருப்பேன். 20வது திருத்தத்தை இரத்து செய்து, 22வது திருத்தத்தை உருவாக்குவது காலத்தில் கட்டாயமாகும்.

இரட்டை குடியுரிமை உடையவர் அரசியலில் பங்குப்பற்ற அரசியலமைப்பின் 22வது திருத்தத்தில் தடையேற்படுத்தப்பட்டுள்ளதால், 22வது திருத்தத்திற்கு எதிராக வாக்களிப்போம் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் குறிப்பிட்டுள்ளமை அவரது தனிப்பட்ட கருத்தே தவிர கட்சியின் தீர்மானம் அல்ல.

ஐக்கிய தேசிய கட்சிக்கும், பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் அரசியல் கொள்கை அடிப்படையில் வேறுபாடுகள் காணப்படுகிறது. நாடு பொருளாதார ரீதியில் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள போது அரசியல் கொள்கைக்கு முன்னுரிமை வழங்க முடியாது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பேச்சளவில் ஒத்துழைப்பு வழங்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு இரகசியமான முறையில் அரசியல் சூழ்ச்சி செய்தால் அது முழு நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணியமைத்து போட்டியிடுவோம். எந்த கட்சியாலும் இனி தனித்து போட்டியிட முடியாது, ஆகவே ஒரு அரசியல் கட்சி பிறிதொரு கட்சியுடன் நிச்சயம் கூட்டணி அமைக்க வேண்டும்.

மீண்டும் எழுவோம் என்ற தொனிப்பொருளின் கீழ் பொதுஜன பெரமுன நடத்தும் கூட்டத்திற்கு நான் எதிர்ப்பு தெரிவித்துள்ளேன்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உட்பட ஆதரவாளர்கள் கடந்த மாதங்களில் இடம்பெற்ற போராட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள், அரசியல்வாதிகள் மீது மக்களுக்கு நம்பிக்கை கிடையாது. அடிமட்டத்தில் உள்ள விடயங்களை திருத்திக் கொள்ளாமல் கட்சி தலைவரை மேடைக்கு ஏற்றுவது பொருத்தமற்றது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த கூட்டத்தை எதிர்வரும் மாதம் கம்பஹா மாவட்டத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தை நடத்த இடமளிக்க முடியாது என்றார்.

## ஐ.நா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது, ஜனாதிபதி அரசாங்கத்தின் தேசிய சுற்றாடல் கொள்கை தொடர்பில் செயலாளர் நாயகத்திற்கு விளக்கமளித்தார்.

இதன் போது 1978இல் இலங்கைக்கான தனது முதலாவது விஜயம் தொடர்பில் செயலாளர் நாயகம், ஜனாதிபதியிடம் நினைவுகூர்ந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான கோப்-27 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி இன்று (06) காலை எகிப்து பயணமானார்.

சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட், காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரப் பணிப்பாளர் தினுக் கொலம்பகே மற்றும் ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் சென்ட்ரா பெரேரா ஆகியோரும் ஜனாதிபதியுடன் எகிப்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குற்றம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 14 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒரு பெண்ணின் அனுமதியின்றி உடலுறவு கொண்டது உட்பட நான்கு பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

சிட்னி பரமட்டா நீதிமன்றம் அவருக்கு பிணை வழங்க மறுத்துள்ளது, மேலும் அவர் நாளை உயர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.

## எல்லை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழுவின் முதலாவது கூட்டம் சனியன்று கொழும்பில் நடைபெற்றது.

தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் இருக்கும் 8 ஆயிரம் பிரதிநிதிகளை நியமிப்பதை 4 ஆயிரமாகக் குறைப்பது தமது குழுவின் பிரதான பணியென மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

## முதல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முதலாவது அரையிறுதிப்போட்டி எதிர்வரும் 09 ஆம் திகதி சிட்னியில் நடைபெறவுள்ளது. குறித்த போட்டியில் பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன.

மேலும் எதிர்வரும் 10 ஆம் திகதி எடிலெய்ட் மைதானத்தில் நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதி போட்டியில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன.

இதேவேளை, இறுதிப்போட்டியானது எதிர்வரும் 13 ஆம் திகதி மெல்போர்னில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குவைத்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ரணதுங்க, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான் உள்ளிட்ட அதிதிகள் இணைந்து உத்தியோகப்பூர்வமாக பயனாளிகளுக்கு இன்று (06) குறித்த வீடுகளை கையளித்து வைத்தனர்.

தலா 13 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த வீடுகளை பயனாளிகளுக்கு கையளித்து வைக்கும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரென்லி டமெல், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைவர் சு. சூரிய ஆராய்ச்சி, மன்னார் பிரதேச செயலகப் பிரதேசச் செயலாளர் எம். பிரதீப், ஐளுசுஊ நிறுவனத்தின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான யு. மிஹ்லார்,குவைட் நாட்டின் இலங்கைக்கான தூதுவரின் இணைப்பாளர் அஷ்ஷெய்க் எம்.பிர்தவ்ஸ் (நளீமி), மன்னார் பிரதேசச் சபைத் தலைவர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.





தனது மகளின் பிறந்த தினத்தை முன்னிட்டு திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தின் மாணவர்களுக்கு விருந்துபசாரமும் வழங்கி கொண்டாடப்பட்டது.பிரபல வர்த்தகரான சீல்ட் குரூப் தலைவர் டாக்டர் எம்.என்.சர்தார் அலி தனது மகள் ஆயிசா மரியமின் பிறந்த நாளை முன்னிட்டு பின் போசனம் வழங்கியதோடு,கலாசாலை க்கு கணணி ஒன்றும் அன்பளிப்புச்செய்யப்பட்டது.நிகழ்வில் நிலையப் பணிப்பாளர் எஸ்.ஐ. எம் ஹபீள், கலாநிதி எம்.என்.எம். அஸீம்,தெஹிவளை கல்கிஸ்ஸை மாநகர சபை உறுப்பினர் சரீனா முஸ்தபா பிரபல பாடகர் அமீர்கான் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (படம் – ஏ.எம்.நவாஸ்)

## ஜனநாயக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தாழ்த்தாமல் இயலுமான ஜனநாயக வழிகளில் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்துமாறு ஸ்ட்ரென்த் எம்.எம்.டி.ஏ (Strengthen MMDA) அமைப்பு முஸ்லிம் சமூகத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை கடந்த (3) ஸ்ட்ரென்த் எம்.எம்.டி.ஏ அமைப்பானது நீதி அமைச்சரைச் சந்தித்தபோதே மேற்படி விடயத்தை எத்தி வைத்து, முஸ்லிம் சமூகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதில்,

முஸ்லிம் விவாக - விவாகரத்து சட்டத்துக்குத் திருத்தங்களை கொண்டு வருவதற்காக முன்னாள் நீதி அமைச்சர் அலிசப்ரியினால் நியமிக்கப்பட்ட குழுவினுடைய பரிந்துரைகளில் சமூகத்துக்கு இருக்கின்ற அதிருப்தி தொடர்பில் நீதி அமைச்சருக்குத் தெரியப்படுத்தியதோடு, அந்த அறிக்கை தொடர்பாக இருக்கின்ற விமர்சனங்களையும் முஸ்லிம் விவாக - விவகாரத்து சட்டத்தினைத் திருத்தம் செய்கின்ற போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் வலியுறுத்துவதற்காகவும் இந்த சந்திப்பானது ஏற்பாடு செய்யப்பட்டது.

நேரில் 5 உறுப்பினர்களும் இணைய வழியாக 5 உறுப்பினர்களும் என மொத்தமாக 10 உறுப்பினர்கள் கலந்து கொண்டு தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில், முன்னாள் நீதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவினுடைய பரிந்துரைகளில்,

1.எமது மார்க்கத்தினுடைய வழிகாட்டல்களுக்குப் புறம்பான திருத்தங்கள் முன்மொழியப்பட்டிருப்பது சுட்டிக்காட்டப்பட்டது.

2. அதுபோல இந்த நாட்டிலே நீண்ட காலமாக நல்லிணக்கத்தோடு வாழ்கின்ற எமது சமூகத்தினுடைய உரிமைகளையும் அடையாளங்களையும் இல்லாமல் ஆக்கக் கூடிய வகையில் செய்யப்பட்டிருக்கின்ற பரிந்துரைகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டது.

3. மேலும் செய்யப்படுகின்ற திருத்தங்களாவன ஏற்கனவே இருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தருவது மாத்திரமில்லாமல், வேறு புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்காதவையாகவும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தற்போது முன்மொழிக்கப்பட்டிருக்கின்ற திருத்தங்களினால் தோன்றக்கூடிய புதிய பிரச்சினைகள் தொடர்பாகவும் நீதி அமைச்சருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

மேற்சொன்ன மூன்று அடிப்படையிலும் எமது சமூகத்துக்குப் பாதகமான விடயங்களை உள்ளடக்கி இருக்கின்ற, முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரியினால் நியமிக்கப்பட்ட குழுவினுடைய அறிக்கையின் அடிப்படையில் சட்ட திருத்தமானது செய்யப்படக்கூடாது என்றும், அந்த அறிக்கையானது நிராகரிக்கப்பட வேண்டும் எனவும், குறித்த ஆலோசனைக் குழுவானது கலைக்கப்பட வேண்டும் எனவும் நீதி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அத்தோடு, இந்தக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்ற அறிக்கையானது பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தினுடைய அபிலாசைகளைப் பிரதிபலிக்கவில்லை என்பதோடு, இந்த அறிக்கையானது பெரும்பான்மையான முஸ்லிம்களது அதிருப்தியைச் சம்பாதித்துள்ளது என்ற விடயமும் நீதி அமைச்சருக்கு எத்தி வைக்கப்பட்டது.

மேற்சொன்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்ட விரிவான அறிக்கையொன்றும் நீதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

முன்னாள் நீதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவினுடைய அறிக்கை மீதான அதிருப்தியினை சமூகமாக வெளிப்படுத்த வேண்டிய அவசியம் உணரப்பட்டிருப்பதால் காலம் தாழ்த்தாமல் இயலுமான ஜனநாயக வழிகளில் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்துமாறு ஸ்ட்ரென்த் மீடியா ளுவசநபெவாநெ ஆஆனுயு அமைப்பு முஸ்லிம் சமூகத்தைக் கேட்டுக் கொள்கின்றது.

## மூத்த பிராந்திய ஊடகவியலாளர் அலியார் ரஷீத் காலமானார்



மூத்த பிராந்திய ஊடகவியலாளர் அலியார் ரஷீத் காலமானார். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பொலன்னறுவை மாவட்ட இணைப்பாளரும், மூத்த பிராந்திய ஊடகவியலாளருமான அலியார் ரஷீத் (81) சனியன்று காலமானார்.

இலங்கையில் நீண்ட காலமாக பிராந்திய ஊடகவியலாளராக பணிபுரிந்த மர்ஹூம் ரஷீத் நிந்தவூரை பிறப்பிடமாகக் கொண்டவர். தனது பெற்றோருக்கு பொலன்னறுவை கிரித்தலையில் அரச காணி கொடுத்த போது அங்கு வந்து குடியேறி வாழ்ந்தவராவார். 1965 முதல் லேக்ஹவுஸ் குரூப் செய்தியாளராகப் பணிபுரிந்த இவர், பிற்காலத்தில் நவமணியின் பொலன்னறுவை செய்தியாளராகவும் பணிபுரிந்தார். இவரது ஊடகச் சேவைக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் உட்பட பல்வேறு அமைப்புக்களால் பாராட்டப்பட்ட இவர், தினமின பத்திரிகையின் செய்தியாளராகவும் பணிபுரிந்துள்ளார். இவரது ஜனாஸா நல்லடக்கம் சனியன்று மாலை கதுருவலையில் இடம்பெற்றது. இவரது மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றது.






# அரங்கம்

# ரிஷாத் நிரபராதியானதை விமர்சிக்கும் விமல் அணியினர்

**ரிஷாத் நிரபராதியானதை விமர்சிக்கும் விமல் அணியினர்**

இவ்வாரம் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் இரு வழக்குகளில் இருந்து நிரபராதியாகி விடுவிக்ககப்பட்டது ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாகப் பார்க்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஏழு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ரிஷாட் பதியுதீன் நிரபராதியாக நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டது அரசியல் அளவில் பேசுபொருளாக மாறியுள்ளது. ஆரம்ப காலத்திலிருந்தே ரிஷாத்தை கடுமையாக விமர்சித்துவரும் விமல் வீரவன்சவின் தேசிய ஐக்கிய முன்னணி இந்த விடுதலை பற்றி மாற்றமான கருத்தொன்றை தெரிவித்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சென்னையில் கைது செய்யப்பட்டிருக்கும் பொழுது இங்கே ரிஷாட் விடுவிக்கப்பட்டிருப்பது பற்றி விமல் வீரவன்சவின் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான ஜயந்த சமரவீர விமர்சன ரீதியாக ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்துள்ளார்.

**முஸ்லிம் நாடான எகிப்துக்கு ரணில் விஜயம்**

இதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீண்ட இடைவேளைக்குப் பிறகு முஸ்லிம் நாடொன்றுக்கு விஜயம் செய்துள்ளார். எகிப்தில் நடைபெறும் உலக காலநிலை தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரணில் விக்கிரமசிங்க தனது அரசின் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமத்துடன் எகிப்து சென்றுள்ளார்.

எதிர்வரும் 14ஆம் திகதி நிதியமைச்சர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க தனது முதலாவது வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளார். 21ஆவது அரசியல் யாப்புப் படி ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சை மட்டுமே வைத்திருக்கலாம். பட்ஜட் உரையை நிகழ்த்திய பிறகு அநேகமாக ஜனாதிபதி நிதியமைச்சை கைவிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது வெளிவிவகார அமைச்சராக இருக்கும் அலி சப்ரி இந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என்றும் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் பட்ஜட்டுடன் அமைச்சரவைக்கு மேலும் சில அமைச்சர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மொட்டுக் கட்சியைச் சேர்ந்த சிலருக்கும், அகில இலங்கை தேசிய காங்கிரஸை ச் சேர்ந்த ஏ.எல்.அதாவுல்லா, இ.தொ.கவைச் சேர்ந்த செந்தில் தொண்டமான் ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் கிடைக்கலாமன எதிர்பார்க்கப்படுகின்றது. பட்ஜட் வாக்கெடுப்புக்கு முன் தாம் சமர்ப்பித்துள்ளவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாவிடின் பட்ஜட்டை தோற்கடிப்பதாக மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்கள் தெரிவித்து வருகின்றனர்.

**ஆர்ப்பாட்டத்தை தடுக்க முயன்ற அரசின் முயற்சி வெற்றியளிக்கவில்லையா?**

நாட்டின் தற்போதைய நிலை, பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் அரசின் அடக்கு முறைக்கு எதிராக பெரடுகாமி கட்சி மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் முன்னணி என்பன ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கடந்த புதனன்று இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தை நிறுத்துவதற்கு அரசு ஊடகங்களைப் பயன்படுத்தியும் பொலிஸாரைப் பயன்படுத்தியும் எடுத்த முயற்சிகள் முறியடிக்கடிப்பட்டது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட ஏனைய பிரதான கட்சிகளும், தொழிற்சங்கங்களும் இணைந்து நடாத்திய ஆர்ப்பாட்டம் வன்செயல்கள் எதுவுமின்றி முடிவுற்றது குறிப்பிடத்தக்கது.

ஆயிரக்கணக்கான பொலிஸாரும், நூற்றுக்கணக்கான படையினரும் நகரெங்கும் குவிக்கப்பட்ட நிலையில் கொழும்பு, மருதானை, எல்பிஸ்டன் திரையரங்கு அருகிலிருந்து தொடங்கிய ஊர்வலம் கோட்டை வரை பயணிக்க தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், தொழில்நுட்பக் கல்லூரி வரையிலே செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது. எதிர்க்கட்சிகள் பொலிஸாரின் தடையை மீறி தொழில்நுட்பக் கல்லூரி அருகிலே கூட்டத்தை நடாத்தி விட்டுக் களைந்து சென்றனர். ஹிருணிகா பிரேமசந்திர போன்ற சிலர் பொலிஸாருடன் மோதி தடைகளைத் தாண்டிச் செல்ல முற்பட்டபோது தலைவர்கள் அதற்கு இணங்காததால் அந்த இடத்தில் சலசலப்பு ஏற்பட்டது. ஒரு சிறு குழு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ விற்கு எதிராகக் கூக்குரலிட்டனர். அரச தரப்பு ஊடகங்களில் இதற்கு முக்கியத்துவமளிக்கப்பட்டிருந்தது. இப்படியொரு சம்பவம் நடப்பதனை எதிர்ப்பார்த்திருந்தது போல ஐ.தே.க. பொதுச் செயலாளர் ரங்கே பண்டாரவின் அறிக்கை அமைந்திருந்ததாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

நாட்டின் நான்காவது அந்தஸ்த்திலிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து சஜித் உடன் விலகி அப்பதவியின் அந்தஸ்த்தைப் பாதுகாக்க வேண்டுமென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சஜித்துக்கு ஹூ வைப்பதன் பின்னணியில் அரச ஆதரவுக் குழு என்கிறார் முஜிபுர் ரஹ்மான்**

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது சஜித்துக்கு ஹூ வைத்தது யார் என இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்வதில் முக்கிய பங்கு வகித்த பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வியாழனன்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தார்.

இந்தக் குழப்பத்தின் பின்னணியில் அரச ஆதரவு தொழிற்சங்கங்களும், கட்சிகளும் இருந்ததாக முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டம் மூலம் எம்மை வன்செயல்கள் புரிபவர்களாக காட்டவே அரசு எதிர்பார்த்திருந்தது. ஆனால் அரசு அதில் தோல்வி கண்டது. இந்த ஊர்வலம் மருதானை எல்பிஸ்டன் திரையரங்கு அருகிலிருந்து ஆரம்பமாவதற்கு தடை விதிப்பதற்கே பொலிஸார் எமது தலைவர்களுக்கு காலையிலேயே கடிதங்களை அனுப்பி வைத்தார்கள். அவ்வாறான கடிதம் ஒன்றினை கொழும்பு மத்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எனது வீட்டிற்கு வந்து கையளித்தார். எம்மை பயமுறுத்துவதற்காகவே இதனை செய்தார்கள். அவர்களது எதிர்பார்ப்பு இடம்பெறவில்லை. இந்த ஆர்ப்பாட்டத்தின் ஆரம்பத்திலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் இருந்தார். அவருக்கு எவரும் தடை போடவில்லை.

கடந்த பல மாதங்களாக கொழும்பு நகரங்களில் ஊர்வலங்கள் எதுவும் நடாத்துவதற்கு இடமளிக்கப்படவில்லை. பொலிஸாரை ஈடுபடுத்தி இதற்கு தடை போட்டார்கள். ஆனால் இந்த ஊர்வலத்தை நடத்தியதன் மூலம் இத்தடைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிந்தது. இதுவே எமக்குக் கிடைத்த வெற்றி ஜனநாயக ரீதியாக ஆர்ப்பாட்டம் செய்வதற்கு உரிமை இருக்கின்றது என்பதனை எமக்கு காட்ட முடிந்தது எனத் தெரிவித்த முஜிபுர் ரஹ்மான், எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிர்ப்பு வரவுமில்லை. யாரும் போகுமாக கூறவுமில்லை. அரசின் முகவர்கள் குழப்பத்தை ஏற்படுத்த முற்பட்டனர் என்றும் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த முன்னனி சோசலிசக் கட்சியின் முக்கியஸ்தரான துமிந்த நாகமுவ, அரசின் கைப்பிள்ளைகளும் ஆர்ப்பாட்டத்துக்கு எதிராகச் சேறு பூசினார்கள் என்று தெரிவித்தார். அண்மைக்காலமாக கொழும்பில் எந்த ஓர் ஊர்வமும் நடத்த இடமளிக்கவில்லை அடக்கப்பட்டது. இந்தப் பின்னணியில் இந்த ஊர்வலம் எமக்கு வெற்றியையே ஏற்படுத்தியது. ஆர்ப்பாட்டத்தின் ஆரம்பத்தில் எல்லோரும் ஒன்றாக இருந்தார்கள். ஊர்வல முடிவில் சிலர் ஆவேசத்துடன் செயற்பட்டார்கள். சிரி தம்மதேரர், லசந்த முதலிகே ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து மக்கள் ஆத்திரத்துடன் இருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசின் கைப்பிள்ளைகள் குழப்பத்தை ஏற்படுத்த முற்பட்டார்கள் என்றும் கூறினார்.

**ஹிருனிகா சஜித்தை ஏசினாரா?**

பொலிஸாரினால் போடப்பட்டிருந்த தடைகளைத் தாண்டி ஊர்வலத்தை ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்த இடத்துக்கு போவதற்கு இடமளிக்காததன் காரணமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர சஜித் பிரேமதாஸவுக்கு ஏசியதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பொலிஸாரின் தடைகளை மீறி ஊர்வலத்தைத் தொடராது அந்த இடத்திலிருந்து ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என சஜித் கேட்டுக் கொண்ட போதே ஹிருணிகா சஜித் மீது கோபம் கொண்டு அவரைத் தூற்றியதாக குறிப்பிட்ட செய்திகளில் தெரிவிக்கின்றது. ஹிருணிகா அண்மைக்காலங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஆவேசமாக நடந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

**ஐ.தே.கவின் செயலாளர் ஆகிறார் கவி கருணாநாயக்க**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில தினங்களுக்கு முன் தனது வீட்டில் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களைச் சந்தித்து கட்சியைப் புனரமைப்பது பற்றி உரையாடியுள்ளார். கட்சியின் பிரதான பதவிகளில் மாற்றங்களை மேற்கொள்வதைப் பற்றியும் இங்கு கருத்துப் பறிமாறப்பட்டுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர் பதவிகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. கட்சியின் செயலாளர் ரங்கே பண்டாரவின் இடத்துக்கு ரவி கருணாநாயக்க நியமிக்கப்படவுள்ளார். தேசிய அமைப்பாளர் பதவிக்கு அமைச்சர் ஹரின் பெர்னான்டோவை நியமிக்கப்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. தமது கட்சிக்கு ஜனாதிபதி பதவி கிடைத்தும் தனக்கு பதவி ஏதும் கிடைக்காமை குறித்து ரங்கே பண்டார அதிருப்தியிலேயே இருப்பதாக சிரிகொத தகவல்கள் தெரிவிக்கின்றன. தனக்கு மட்டுமன்றி தான் சிபாரிசு செய்த எவருக்கும் எந்த நியமனமும் வழங்கப்படாதது குறித்தும் ரங்கே பண்டார அதிருப்தி கொண்டுள்ளதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மொட்டுக் கட்சியின் பட்ஜட்டை தோற்கடிக்க வேண்டாமென ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு கோரிக்கை**

மொட்டுக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் 2023 ஆம் ஆண்டுக்கான பட்ஜட்டை தோற்கடிப்பதற்கு ஆதரவு வழங்க வேண்டாமென ஐ.தே.க. செயலாளர் கட்சி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார். கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளின் படியே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. தலைமையகத்தின் இக்கோரிக்கைக் குறித்து அநேக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அதிருப்தி கொண்டுள்ளார்கள் என்றும், எனினும் கட்சியின் வேண்டுகோளாக இருப்பதனால் பகிரங்கமாக எதனையும் தெரிவித்து வருவதிலிருந்து தவிர்ந்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தீர்மானம் குறித்து கோட்டே மாநாகர சபை பெண் உறுப்பினர் ஒருவர் தான் ஆட்சேபிப்பதாக தமது முகநூலில் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியை விட நான் மக்களையே விரும்புகிறேன். கோட்டே மாநகரசபை முதல்வரும், உறுப்பினர்களும் எமக்கு இதுவரை ஒரு சதம் கூட ஒதுக்கவில்லை. எம்மை வெற்றிபெறச் செய்வது பொதுமக்களே, இப்படி இருக்க நாம் மொட்டுக்கு வாக்களித்தால் எனது வட்டாரத்தில் நடந்து போகக்கூட முடியாமல் போகலாம் என்று அவர் தமது முகநூலில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் இத்தீர்மானம் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு கட்சியின் செயலாளர் தயாசிரி ஜயசேகர, சிரேஷ்ட உப தலைவர் சான் விஜேலால் ஆகியோர் கலந்து கொண்ட செய்தியாளர் மாநாட்டில் இது பற்றி கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.கவும், பொதுஜன பெரமுனவும் அடுத்த தேர்தலில் ஒன்று சேர்ந்து போட்டியிடுவதற்கு தயாராகி வருவதாக நாட்டில் ஒரு கருத்து நிலவுவதாக சான் விஜேலால் தெரிவித்துள்ளார். சில தலைவர்கள் கூறும் கருத்துக்களைப் பார்க்கும்போது அது நடக்கலாம் என்று ஊகிக்க முடிகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அண்மையில் ஜனாதிபதி கூறிய டைடேனிக் கப்பல் பற்றியும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

நான் பாடசாலை செல்லும் நாட்களில் டைடானிக் கப்பல் பற்றிக் கேள்விப்பட்டுள்ளேன். வாசித்துமுள்ளேன். இறுதியில் கப்பல் ஐஸ் மலையில் மோதி மூழ்கி விடுகின்றது.

மூழ்கிய டைடானிக் கப்பலைப் போன்று நாட்டின் பொருளாதாரமும் இருப்பதாக ஜனாதிபதி கூறினார். அப்படியானால் அவர் சொல்லாமல் சொல்வது நாட்டின் பொருளாதாரத்துக்கும், நாட்டிற்கும் நடப்பதையே என்றும் சான் விஜயலால் தெரிவித்தார்.

இதேநேரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்தியக்குழுக் கூட்டத்தில் நீண்ட இடைவேளைக்குப் பின் ரணில் அரசில் அமைச்சர் பதவி கிடைக்குமெனக் காத்திருக்கும் துமிந்த திசாநாயக்க கலந்து கொண்டுள்ளார். நீண்ட நாட்களாக கூட்டங்களை பகிஷ்கரித்து வந்த துமிந்த இக்கூட்டத்தில் கலந்து கொண்டது மத்திய குழுவில் பலரையும் வியப்புக்குள்ளாக்கியது. கூட்ட இறுதியில் கூட்டத்திலிருந்து வெளியேறி வந்த செயலாளர் தயாசிறி ஜயசேகரவிடம் துமிந்தவின் வருகை பற்றி ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள். பொதுவாக மத்தியக்குழு அங்கத்தவர்கள் சகலருக்கும் நாம் அழைப்பு விடுப்போம். அதன்படியே அவர் வந்துள்ளார் என்று தெரிவித்தார்.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 NOVEMBER 06 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் ஷரீஅத்துக்குட்பட்டதாகவே அமைய வேண்டும்

ஸ்ட்ரென்தன் எம்.எம்.டீ.ஏ. என்ற முஸ்லிம் விவாக–விவாகரத்து சட்டத்தை பலப்படுத்தும் அமைப்பு முஸ்லிம் விவாக–விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும்போது கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்கள் குறித்து நீதியமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தி விரிவான அறிக்கையொன்றையும் கையளித்துள்ளது. முஸ்லிம் பெண் சட்டத்தரணிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கிய தூதுக்குழு அமைச்சரிடம் பிரதானமாக முன்வைத்திருப்பது திருத்தங்கள் இஸ்லாத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதாகும். இதற்கு முன் அமைச்சர் அலி சப்ரி நீதியமைச்சராக இருக்கும்போது நியமிக்கப்பட்ட குழு செய்த சில சிபாரிசுகள் இஸ்லாமிய ஷரீஆத்துக்கு முரணான இருப்பதாக இத்தூதுக்குழுவினர் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

முன்னைய குழு இவ்வாறான சிபாரிசுகளை ஏன் செய்தது? அக்காலத்திலிருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக சில வற்புறுத்தல்களுக்கு மத்தியில் இந்த சிபாரிசுகளை செய்தார்களா? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. எப்படியிருந்தாலும் ஷரீஅத்துக்கு முரண்பட்ட சிபாரிசுகளை செய்தது கண்டனத்துக்குரியதே. இதனை நாட்டையும், சமூகத்தையும் தவறாக வழிநடாத்த எடுத்த ஒரு முயற்சியாகவே காணலாம். இந்த வகையில் முன்பு இடம்பெற்றுள்ள தவறுகளை சுட்டிக்காட்டி எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள்இடம்பெறாதிருப்பதற்கான அவசியத்தை தூதுக்குழு அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளது பாராட்டுக்குரியது.

ஸ்ட்ரென்தன் எம்.எம்.டீ.ஏ. என்ற அமைப்பு மூன்று பிரதான விடயங்களை அமைச்சர் ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டியுளள்து. ஒன்று இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு புறம்பாக திருத்தங்கள் முன்மொழியப்பட்டிருப்பது. இரண்டாவது: நாட்டில் நீண்ட காலமாக நல்லிணக்கத்துடன் வாழும் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளையும், அடையாளங்களையும் இல்லாமல் சயெ்யும் வகையி செய்யப்பட்டுள்ள சிபாரிசுகள். மூன்று:– திருத்தங்களில் ஏற்கனவே இருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதை மாத்திரமின்றி வேறு புதிய பிரச்சினைகளை தோற்றுவிக்காதிருக்க வேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

இந்த மூன்று அடிப்படையிலும் சமூகத்துக்கு பாதகமான விடயங்கள் உள்ளடக்கியிருப்பனால் முன்னைய குழு செய்த சிபாரிசுகளின் அடிப்படையில் திருத்தங்கள் செய்யப்பட கூடாதென்றும் தாம் அமைச்சரிடம் தெளிவாக சுட்டிக்காட்டியதாக ஸ்ட்ரென்தன் எம்.எம்.டீ.ஏ. அமைப்பு தெரிவிக்கின்றது.

உருவாகியுள்ள புதிய அரசியல் சூழ்நிலையில் விவாக – விவாகரத்துச் சட்டத்தில் மாற்ங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு அரசுக்கு அழுத்தங்கள் வழங்கப்படுவது அவசியமாகும். இது தொடர்பாக நீதியமைச்சரின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ள நிலையில், தூதுக்குழுவினர் நீதியமைச்சரை தெளிவுபடுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு காலமாக இப்படியான சிபாரிசுகள் இருக்கும் அறிக்கை பற்றி யாரும் பேசாமலே இருந்தார்கள். அந்த வகையில் இந்த பெண் சட்டத்தரணிகளின் துணிச்சலான முயற்சி பாராட்டுக்குரியது.

இங்கே நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய விடயம் பல தசாப்தங்களாக முஸ்லிம் விவாக–விவாகரத்து பற்றி பேசப்படுகின்றது. கருத்து முரண்பாடுகள் காரணமாக நீண்ட காலமாக கொண்டு வரக்கூடிய அத்தியாவசியமான திருத்தங்கள் கூட இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. சில தீய சக்திகள் ஊடுருவி இந்தத் திருத்தங்கள் இடம்பெறுவதனை தடுக்க முற்படுவதனையும கணக்கூடியதாக உள்ளது. இங்கே முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது இது தொடர்பாக இறுதியாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கே இருக்கின்றது. பாராளுமன்றத்தில் இருக்கின்ற 21 முஸ்லிம் உறுப்பினர்களும் இஸ்லாமிய ஷரீஅத்துக்கு உட்பட்டதாக முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தை திருத்துவதற்கு தலைமைத்துவம் வழங்கவேண்டும். இதன்போது உலமாக்கள் சட்டத்துறையினர், புத்திஜீவிகளின் கருத்துக்களையும் உள்வாங்கி செயற்படவேண்டுமென்பதே சமூகத்தினுடைய ஒருமித்த எதிர்பார்ப்பாகும்.

இந்த பிரச்சினைகளை அடுத்த தலைமுறையினருக்கு விட்டு வைக்காது இப்போதுள்ள தலைவர்கள் ஒரு இணக்கத்தை ஏற்படுத்தி பொருத்தமான சட்ட வரையறைகளை உருவாக்குவதற்கு இனியும் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# பற்சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்கள் தொடர்பான ஓரம் நிறுவனத்தின் தலைமையகம் தெஹிவளையில் திறப்பு!











Oram Dental Center

பற்சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் நவீன மருத்துவ உபகரணங்களை இலங்கை பற்சிகிச்சை மருத்துவ துறைக்கு விநியோகிக்கும் முன்னணி நிறுவனமான ஒரம் உலகலாவிய தனியார் நிறுவனம் அதன் தலைமையகத்தை தெஹிவளை, பெப்பிலியான, நெதிமால, இலக்கம் 92 இலக்கக் கட்டடத்தில் கோலாகலமாகத் திறந்து வைத்துள்ளது.

ஒரம் உலகலாவிய தனியார் நிறுவனத்தின் தலைவர் ஜாபிர் சாலி, உலகலாவிய நிறைவேற்று பணிப்பாளர் முஸ்தாக் ஜாபிர், Mudassair Jabir பணிப்பாளர் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் முன்னாள் அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் இந்தியாவில் மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்யும் பல்தேசிய நிறுவனமான கமல் என்கொன் இன்டஸ்ட்ரீஸ ின் பணிப்பாளர் விக்ரம் பிரதாப்காத், வதிவிட முகாமையாளர் முஹம்மட் அலி கட்ரி, பயிற்சி மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் டாக்டர் நீட்டா செட்டி உள்ளிட்டோர் விஷேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தலைமை உரையாற்றிய நிறுவனத்தின் உலகலாவிய நிறைவேற்று அதிகாரி முஸ்தாக் ஜாபிர், ஒரம் உலகலாவிய தனியார் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பின்னணி குறித்தும் இந்நிறுவனம் அடைந்துள்ள வளர்ச்சிகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

"பற்சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் நவீன மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்து இந்நாட்டு சந்தைக்கு நாம் அறிமுகப்படுத்துகின்றோம். அத்தோடு பல் வைத்தியர்களுக்கும் பற்சிகிச்சை மருத்துவர்களுக்கும் பற்சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து அறிமுகப்படுத்தும் வகையில் சான்றிதழ் கற்கைகளை முன்னெடுக்கின்றோம். இக்கற்கைகளுக்கான வளவாளர்களாக நவீன பற்சிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான முன்னணி பல் வைத்தியர்களைக் கொண்டு செயன்முறையுடன் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

எமது பயணத்தில் உலகின் முன்னணி நிறுவனங்களாக விளங்கும் இந்தியாவின் கமல் என்கொன் இன்டஸ்ட்ரீஸ், கமல் மெடிக் டெக் என்பன எம்முடன் கைகோர்த்திருப்பதை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். இது எமது நிறுவனத்திற்கும் இந்நாட்டின் நவீன பற்சிகிச்சைக்கும் ஓர் மைற்கல்லாகும். இதன் ஊடாக இந்நாட்டின் பற்சிகிச்சை மருத்துவ துறை மேலும் நவீனமயமாகும் என்றார்.

"இவ்வாறான நவீன துறைகளை பாராட்டி ஊக்குவிப்பது காலத்தின் அவசியத் தேவை என்றும் இப்பணியை முன்னெடுக்கும் நிறுவனத்தின் தலைவர், உலகலாவிய நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களையும் வாழ்த்திப் பாராட்டுவதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அகில காரியவசம் உரையாற்றும் போது கூறினார்.

நவீன மருத்துவ தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய பற்சிகிச்சை நிலையமும் இத்தலைமையகக் கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தின் போது ஒரம் நிறுவனத்தின் தலைவரும், உலகலாவிய நிறைவேற்று அதிகாரியும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர், கமல் என்கொன் இன்டஸ்ட்ரீஸின் பணிப்பாளர் உள்ளிட்ட அதிதிகளுக்கும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர். பல் வைத்தியர்கள் உட்பட துறைசார் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# காஷ்மீர் கருப்புத்தினத்தை முன்னிட்டு பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி!

(அப்ரா அன்சார்)

காஷ்மீர் கறுப்பு தினத்தை குறிக்கும் வகையில் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் கருத்தரங்கு மற்றும் புகைப்படக் கண்காட்சியொன்றை கடந்த 27 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது, இந்தியா சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு காஷ்மீரில் இந்தியப் படைகள் செய்த அட்டூழியங்களைச் சித்தரிக்கும் ஆவணப்படங்கள் மற்றும் புகைப்படங்களும் பங்கேற்பாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

1947 ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் கைகளில் அப்பாவி காஷ்மீரிகள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதையும், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நடந்த இந்திய அட்டூழியங்களையும் பேச்சாளர்கள் சுட்டிக்காட்டினர்.

1947 ஆம் ஆண்டு ஒக்டோபர் 27 ஆம் திகதி, சட்டவிரோதமான முறையில் காஷ்மீர் பள்ளத்தாக்கை இந்தியா ஆக்கிரமித்தது. அப்போதிலிருந்து, இந்திய சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு மற்றும் காஷ்மீரானது உலகத்தின் மிகப்பெரிய சிறைச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. காஷ்மீர் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் சிறப்பு அமர்வுகள் குறித்து பேசிய பேச்சாளர்கள், இந்திய அட்டூழியங்களுக்கு சர்வதேச சமூகம் இனி ஒருபோதும் அமைதியாக இருக்காது என்றும் குறிப்பிட்டனர்.

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் ஃபரூக் பர்கி கருத்துத் தெரிவிக்கையில்,

பேச்சாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு, ஜம்மு மற்றும் காஷ்மீரில் பல தசாப்தங்களாக இந்திய சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு எதிரான நியாயமான போராட்டத்திற்காக ஜம்மு மற்றும் காஷ்மீர் மக்களுக்கு மரியாதை செலுத்தியதோடு காஷ்மீரிகளின் சுயநிர்ணய உரிமைக்கு பாகிஸ்தானின் அரசியல் மற்றும் இராஜதந்திர ஆதரவினை மீண்டும் வலியுறுத்தினார். கண்காட்சி மற்றும் கருத்தரங்கின் நோக்கத்தை விளக்கிய உயர் ஸ்தானிகர், பாகிஸ்தானும் அதன் மக்களும் நமது காஷ்மீரி சகோதர சகோதரிகளுடன் தங்கள் இதயங்களிலும் மனதிலும் ஒன்றுபட்டுள்ளனர். காஷ்மீர் மக்களின் அபிலாஷைகளின் படியும் மற்றும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களுக்கு ஏற்பவும் காஷ்மீர் பிரச்சனைக்கான நிரந்தர தீர்வுக்காக நாங்கள் எப்போதும் துணை நிற்போம்.

உலகளாவிய அரசியலின் ஏற்றத்தாழ்வுகள் இருந்தபோதிலும், காஷ்மீரிகளுக்கு அவர்களின் சுயநிர்ணய உரிமை, சுதந்திரம் ஆகியவை வழங்கப்படும் வரை காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் எப்போதும் துணையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.



# இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது கஹட்டோவிட்ட FC

(அப்ஹம் நிஸாம்)

ஸ்ரீபோதி மைதானத்தில் நேற்று (06) நடைபெற்ற குகுளுடு தங்க கிணத்துக்கான கம்பஹா வலய போட்டியின் அரைஇறுதிப் போட்டியில் திஹாரிய யுனைடட் அணியை எதிர்த்து கஹட்டோவிட்ட குஊ (KFC) அணி களம் கண்டது.

இதற்கு முன்பு இரு அணிகளும் மூன்று முறை நேருக்கு நேர் மோதி இருந்தாலும் திஹாரிய யுனைடட் அணி இதுவரை ஒரு வெற்றியையேனும் பெற்றிருக்கவில்லை. இந்த போட்டியை வென்று தமது முதலாவது வெற்றியை பதிவு செய்யும் நோக்கில் களம் கண்டது யுனைடட் அணி.

போட்டியின் 27வது நிமிடத்தில் அம்ஹார் தனது அணிக்காக முதலாவது கோலை பெற்றுக் கொடுக்க முதல் பாதியை முகுஊ அணி முன்னிலை பெற்று நிறைவு செய்தது.

இரண்டாவது பாதி தொடங்கி 10வது நிமிடத்தில் திஹாரிய யுனைடட் அணிக்காக நிப்ராஸ் ஒரு கோலை பெற்றுக் கொடுக்க போட்டி சமநிலையை அடைந்தது.

மீண்டும் செயல்பட்ட முகுஊ வீரர் ஹாமித் 83வது நிமிடத்தில் இன்னொரு கோலைப் பெற்றுக் கொடுக்க KFC அணி 2-1 என்ற கோல் கணக்கில் இறுதி நேரம் வரை முன்னிலை பெற்று வெற்றியை தமதாக்கி புயஅியாய வலய இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது .

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த தோட்ட தொழிலாளியின் குடும்பத்தினரிடம் நஷ்டஈடு வழங்கி வைப்பு




(தலவாக்கலை பி.கேதீஸ்)

தோட்ட நிர்வாகத்தின் அழுத்தத்தின் பேரில் பலவந்தமாக பணிக்கு அமர்த்தப்பட்டு மின்சாரம் தாக்கி உயிரிழந்த நமுனுகல கனவரெல்ல தோட்ட தொழிலாளி ஹர்ஷன் கணேஷ்மூர்த்தியின் மரணத்துக்கு நட்ட ஈடாக 40 இலட்சம் ரூபாவை கடுமையான போராட்டத்தின் மூலம் நமுனுகல பெருந்தோட்ட நிறுவனத்திடமிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுக்கொடுத்துள்ளது. இதற்கான காசோலையை இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் வியாழனன்று (3) குறித்த குடும்பத்தினருக்கு வழங்கி வைத்தனர். நமுனுகலை பெருந்தோட்ட நிறுவனம் உயிரிழந்த இளைஞனுக்கு மரண சடங்கிற்கான செலவு உட்பட 15000 ரூபாய் மாத்திரமே நட்ட ஈடு வழங்க முடியும் என தெரிவித்திருந்தது. இத்தொகையை பெற்றுக் கொள்ள வேண்டாம் என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் அக்குடும்பத்தினருக்கு அறிவித்திருந்த நிலையில், உயிரிழந்த இளைஞனுக்கு உரிய நட்ட ஈடு வழங்கப்படும் வரையில் இளைஞனின் பூதவுடல் அடக்கம் செய்யபடாது என தெரிவித்த செந்தில் தொண்டமான் இளைஞனின் பூதவுடலை தொழிற்சாலையில் வைத்து நமுனுகலை பெருந்தோட்ட நிறுவனத்திற்கு எச்சரிக்கை விடுத்தார்.

இச்சம்பவம் குறித்து நமுனுகலை பெருந்தோட்ட நிறுவனம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தது. அம்முறைப்பாடிற்கு இ.தொ.கா இடமளிக்காமையால் தொழில் அமைச்சில முறைப்பாடு செய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த மாதம் 14 ஆம் திகதி தொழில் அமைச்சில், தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் உயிரிழந்த தொழிலாளிக்கு உரிய நட்ட ஈட்டை வழங்குவது தொடர்பில் இ.தொ.கா தோட்ட நிர்வாகத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையில் உயிரிழந்த இளைஞனுக்கு 40 இலட்சம் ரூபா தருவதாக முடிவு செய்யப்பட்டது.

இந்த நட்ட ஈடு தொகை குறித்து இளைஞனின் குடும்பத்தார் மற்றும் தோட்ட மக்களுடன் கலந்து ஆலோசித்து அவர்களின் விருப்பத்திற்கு அமைய பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதற்கமைய, இ.தொ.காவின் தொடர் போராட்டத்தினால் இலங்கை வரலாற்றில் முதன் முறையாக தோட்ட தொழிலாளி ஒருவருக்கு நட்ட ஈடாக 40 இலட்சம் ரூபா வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# நவ லங்கா நிதஹஸ் கட்சியின் அத்தனகல்ல தொகுதி முக்கியஸ்தர்கள் - முன்னாள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(ரிஹ்மி ஹக்கீம்)

நவ லங்கா நிதஹஸ் கட்சியின் அத்தனகல்ல தேர்தல் தொகுதியிலுள்ள முக்கியஸ்தர்களை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த ஞாயிற்றுக்கிழமை (30) அவருடைய ஹொரகொல்ல இல்லத்தில் சந்தித்தார்.

இந்நிகழ்வில் கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் அல்ஹாஜ் ருஷ்தி உஸ்மான், அத்தனகல்ல பிரதேச சபை உறுப்பினர்களான யமுனா ரஞ்சனி, சுதர்ஷனி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சாந்த உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் ருஷ்தி உஸ்மானுக்கு அண்மையில் வழங்கப்பட்ட நியமனக்கடிதத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.



# PULATHISI OPEN KARATE CHAMPIONSHIP 2022 போட்டியில் SKMS மாணவர்கள் சாதனை







பொலன்னறுவ தேசிய விளையாட்டு உள்ளக அரங்கில் நடைபெற்ற PULATHISI OPEN KARATE CHAMPIONSHIP 2022 போட்டியில் USKU கராத்தே சங்கத்தின் கிழக்கு மாகாண SKMS கராத்தே பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி மொத்த பதக்கங்கள் அடிப்படையில் Senior Runner Up கிண்ணத்தை பெற்று வெற்றி பெற்றுள்ளர்.

சிஹான் HMSK.ஹேரத் மற்றும் சென்செய் நிரோஷன் தலைமையில் வடமேல் மாகாண, வடமத்தி மற்றும் கிழக்கு மாகாண போட்டியாளர்களை கொண்டு கடந்த சனிக்கிழமை (29) நடைபெற்ற இப்போட்டியில் கிழக்கு மாகாண ருளுமுரு கராத்தே சங்க மாணவர்கள் சிஹான் ஆஎ.வஹாப்தீன் தலைமையில் கலந்து கொண்டு 16 தங்கப்பதக்கம் 09 வெள்ளிப்பதக்கம் 13 வெண்கலப்பக்கதத்தையும் பெற்று Senior Runner Up வெற்றிக்கிண்ணத்தையும் சுவீகரித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போட்டியானது Sub junior (6-13 years), Cadet (14-15years)› Junior(16-17Years), Under 21yeras, Senior (21+ yeras) ஆகியோருக்கான காத்தா,குமித்தே,குழுக் காத்தா ஆகிய போட்டி நிகழ்சிகள் நடைபெற்றதோடு பிரதம அதிதிகளாக வெலிகந்த பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் கே.ஜி. அசேல சரத் குமார் மற்றும் கலால் வரி ஆய்வாளர். ஜே.எம். லலித் வீரசிங்க ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அத்தோடு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ருளுமுரு கராத்தே சங்கத்தின் பணிப்பாளர் / போதானாசிரியர் சிஹான் ZA.RAUF வாழ்த்துக்களை தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# பாடசாலையின் குறைபாடுகள், எதிர்கால முன்னேற்றம் தொடர்பில் பேருவளையில் விஷேட கூட்டம்








(பீ.எம் முக்தார்)

பேருவளை சீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை மற்றும் நளீம் ஹாஜியார் மகளிர் தேசிய பாடசாலை ஆகியவற்றில் உயர்தரவகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி மேம்பாடு குறித்தும் பாடசாலையின் குறைபாடுகள் தொடர்பிலும் பாடசாலையின் எதிர்கால முன்னேற்றம் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்பு குறித்து ஆராயும் விஷேட கூட்டம் நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி தேசமான்ய பாக்கிர் மாக்கார் மண்டபத்தில் அதிபர் பஹீமா பாயிஸ் தலைமையில் நடைபெற்றது.

சீனன் கோட்டை பள்ளிச்சங்க தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார், பிரதித்தலைவர்களான அல் ஹாஜ் யாகூத் நளீம், அல் ஹாஜ் எம்.எஸ்.உம் ரஸ்வி உட்பட பள்ளிச்சங்க உறுப்பினர்கள், சீனன் கோட்டையில் உள்ள சமூக நல அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள், இரு பாடசாலைகளினதும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள் பலரும்கலந்து கொண்டனர்.

அதிபர் பஹீமா பாயிஸ், சீனன் கோட்டை இணைப்பொருளாலர் எம்.,ஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியார், பள்ளிச்சங்க ,ணைச் செயலாளர் ரம்லான் அரூஸ், சீனன் கோட்டை பள்ளிச்சங்க உறுப்பினரும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை நிறைவேற்றுக் குழு உறுபபினருமான அஷ் ஷெய்க் ஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) ஜாமியா நளீமியா கலாபீட நூல் நிலைய நூலகர் அஷ் ஷெய்க் பஹ்ரி அனஸ் (நளீமி) ஆசிரியர்களான முனவ்வரா இம்தியாஸ் நஸ்ரியா அம்ஜத் அஷ் ஷெய்க் அஹ்மத் ஸூகைர் நளீமி, ரய்ஸா இர்பான் ஆகியோர் இங்கு உரை நிகழ்த்தினர்.

சீனன் கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் ரம்லான் அரூஸ் இங்கு உரையாற்றும் போது சீனன் கோட்டை பள்ளிச்சங்கம் ஊரில் உள்ள இரு பாடசாலைகளையும் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை தருவதாக ஊறியளித்தார்.

பெற்றோர்கள் மத்தியில் கல்வி விளிப்புணர்ச்சியை ஏற்படுத்தி ,ரு பாடசாலைகளையும் சிறந்த நிலைக்கு கொண்டுவர அனைவரும் எம்மோடு கைகோர்தது செயல்பட வேண்டும் பாடசாலைகளை வீழ்ச்சியடைய நாம் ஒரு போதும் இடமளிக்கக்கூடாது என்றார்.

# தொண்மை படைத்த தமிழின் சிறப்பை காப்போம்

## டாக்டர் அர்ஷத் அஹ்மத்





(ஹிமாயா ஹமீட்)

முன்னைய காலத்தில் புலவர்கள் இருந்தார்கள். அரச கவிஞர்கள் இருந்தார்கள். அவர்கள் பாடுவதுதான் இலக்கியம் அவர்கள் சொல்வதுதான் தான் இலக்கியம் என்று பண்டைய தமிழுக்கு ஒரு வரையறை இருந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல, புதிய பரிணாம வளர்ச்சியில் அனைவரும் எழுதுகிறார்கள். அனைவரும் கவிஞர்களாக மாறுகிறார்கள். இப்படியான நிலையில் பண்டைய தமிழ் அதன் தன்மையை, அதன் தொண்மையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது - என்று குழந்தை நல மருத்துவர் அர்ஷத் அஹ்மத் தெரிவித்தார்.

கொழும்பு ஸாஹிரா தேசிய பாடசாலை தனது 130 ஆவது வருட நினைவை முன்னிட்டு தமிழ் மொழித் தின நிகழ்வை கல்லூரியின் அப்துல் கபூர் மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடியது. கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வைத்தியர் அர்ஷத் அஹ்மத் தமிழின் சிறப்பை எடுத்தியம்பி சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மேலும் அவர் கூறியதாவது,

தமிழே வாழ்க! தாயே வாழ்க! கமழக் கமழக் கனிந்த கனியே அமைந்த வாழ்வின் அழகே வாழ்க! சேர, சோள பாண்டியரெல்லாம் ஆர வளர்த்த ஆயே வாழ்க! ஊரும் பேரும் தெரியா தவரும் பாரோர் அறியச் செய்தாய் வாழ்க! சீரிய அறமும் சிறந்த வாழ்வும் ஆரும் அடையும் அறிவைப் பொழிந்தாய். தமிழைத் தனித்த புகழில் நட்டாய், தமிழின் பகைவர் நெஞ்சைச் சுட்டாய். தமிழே ஆதித் தாயே வாழ்க! தமிழர்க்கெல்லாம் உயிரே வாழ்க! என பாரதிதாசனின் வாழ்த்துப் பாடலோடு மருத்துவரின் உரை தொடங்கியது.

தமிழை அமுதென்றும் சொல்வர். செம்மொழி என்றும் சொல்வார்கள். ஏனெனில் தமிழுக்கு தொன்மை இருக்கிறது. அதற்கென்று ஒரு தனித் தன்மை இருக்கிறது. பொதுத் தன்மையும் இருக்கிறது. அதனை தாய்மொழியாகக் கொண்ட பெரும்பாலான மக்கள் உலகெங்கிலும் இருக்கிறார்கள். இலக்கிய, இலக்கணம் கலந்த செம்மை இருக்கிறது. கலை நயம், உயர்ந்த சிந்தனை, முழுக் கோட்பாடு என்ற பல்வேறு பண்புகள் இருப்பதனால் தமிழை செம்மொழி என்றும் அழைப்பர். தமிழில் ஆடல், பாடல், இசை என்பன சிலப்பதிகாரமாகவும், இயல், இசை, நாடகம் என்பன முத்தமிழாகவும் வரையறுக்கனிறது.

அது பழைமையான மொழி, பண்பட்ட மொழி. மனிதன் தோன்றிய காலத்திலிருந்து தோன்றிய மூத்த மொழி தமிழ் மொழியாக அறியப்படுகின்றது. கல்தோண்டி மண்தோண்டா காலத்துக்கு முன் தோன்றியது மொழி தமிழ் மொழி என்றும் சொல்வர்.

பண்டைய வரலாற்றை எடுத்துக் கொண்டோமேயானால், பபிலேனியர், பாரோக்கள், ஆரியர்கள், திராவிடர்கள், சீனர்கள் என அனைவரும் பயன்படுத்திய மொழியாக தமிழை குறிப்பிடலாம். உலகின் எந்தவொரு நாகரீகத்திலும் தமிழ் மொழிக்கு இருக்கும் வளர்ச்சி வேறெந்த மொழிக்கும் இருப்பதாக கூறமுடியாது. அந்தளவிற்கு தமிழ் மொழி ஒரு மூத்த மொழியாக செல்வாக்கு செலுத்துகின்றது. 6000 ஆண்டுகளுக்கு முன்னர் எழுத்து மொழி உருவாகியிருக்கிறது. அதற்கு முன்னர் மனிதன் ஒரு வேட்டையாடி இனமாக வாழ்ந்துவந்தான். மொழி உருவானதன் பின்னர் மனிதன் மொழியை கற்கத் தொடங்கினான். எழுதத் தொடங்கினான். அதன் பின்னர் நாகரீகத்தைக் கட்டியெழுப்பக் கூடியவனாக மனிதன் மாறியிருக்கிறான். அரசாங்கங்கள், கட்டடக் கலை, சிற்பம் அனைத்து நாகரீகத்திலும் தமிழ் மொழி செல்வாக்கு செலுத்துகின்றது.

சிலருடைய ஆய்வுகளின் படி ஆதமுடைய மக்களில் ஷீத் என்பவர் (ஷீது அலைஹிஸ்ஸலாம்) பேசிய மொழியாக தமிழ் மொழியை குறிப்பிடப்படுகிறது. அதிலிருந்து வந்ததுதான் சேது சமுத்திரம். இது இந்திய உப கண்டத்தில் இருக்கின்றது.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சி தமிழின் பண்பாட்டை, அதன் தேவையை உடைத்து தரைமட்டமாக்கியிருக்கிறது. முன்னைய காலத்தில் புலவர்கள் இருந்தார்கள், அரச சபை கவிஞர்கள் இருந்தார்கள். அவர்கள் பாடுவதுதான் இலக்கியம். அவர்கள் சொல்வது தான் இலக்கியம். ஆனால் இப்போது அப்படியல்ல. யார் வேண்டுமென்றாலும் எழுதலாம், யார் வேண்டுமானாலும் எதையும் பாடலாம். முன்னர் இருந்த சம கல்வி தற்போது இல்லாமலாக்கப்பட்டிருக்கிறது. பண்டைய காலத்து இலக்கியங்களை வாசிப்பவர்கள் மிகவும் அரிதாகவே இருக்கிறார்கள்.

எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களை அமைத்து தொல்காப்பியர் தமிழுக்கு இலக்கணம் வகுத்தார். அகம், புறம் என இருவகைப்படுத்தி இலக்கணங்களைக் கொண்ட பெருமை தமிழ்மொழிக்கு மாத்திரமே உண்டு.

இலக்கியம் என்னும் சஞ்சீவியால் தான் தமிழ்மொழி இன்றும் சிரஞ்சீவியாக வாழ்ந்துக் கொண்டிருக்கின்றது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்கணக்கு, பதினெண் மேல் கணக்கு, ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் போன்றவை தமிழின் பெருமையை பறைசாற்றுகின்றன. பன்னிரு திருமுறைகள், சீராப்புராணம், குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் என்பன பக்தி மணம் பரப்புகின்றன. நல்வழி, மூதுரை, உலகநீதி, கொன்றைவேந்தன் போன்றன நீதிநெறிகாட்டும் வழிகாட்டிகளாக விளங்குகின்றன. தொல்காப்பியம், அகத்தியம், நன்னூல், தண்டியலங்காரம் போன்ற இலக்கண நூல்கள் தமிழை அழியாமல் காத்து வருகின்றன.

ஆனால் இப்படியான சிறப்புமிக்க புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் கூட தற்போது இல்லாமலாக்கப்பட்டு வருகின்றது. புதிய தலைமுறையினருக்கு வாசிப்பதற்கு நேரமில்லை. நவீன தொழில்நுட்ப சாதனங்களின் உருவாக்கம் முற்றாகவே வாசிப்புப் பழக்கத்தை இல்லாமலாக்கியுள்ளது. தமிழின் பழைமை இல்லாதொழிக்கும் காலமாக இன்றைய காலம் மாறி வருகின்றது. எனவே இது மாறவேண்டும். செம்மொழியான தமிழின் தொண்மை, தனித்தனமை, இலக்கண, இலக்கிய வளம், கலைநயம், மொழிக்கோட்பாடு அனைத்தும் புதிய தலைமுறையினருக்கு எடுத்தியம்புவதன் மூலம் தமிழின் தொண்மை மாறாது, மறவாது இருக்க வழிசெய்யவேண்டும்.

ஆய்வுகளின் மொழியாக, ஆராய்ச்சிகளின் மொழியாக, பொழுதுபோக்கின் மொழியாக, விஞ்ஞானத்தின் மொழியாக, இசையின் மொழியாக தமிழ் மொழி மாற வேண்டும். அதன் சிறப்பு எப்போதும் மங்காத ஒளியாக வீருநடை போடவேண்டுமென தமிழ் மொழியின் தேவையை உணர்த்தியாறு டொக்டர் அர்ஷத் அஹ்மதின் உரை நிறைவுக்கு வந்தது.

ஸாஹிராவின் 130 வருட நிறைவை எடுத்தியம்பிய வில்லுப்பாட்டு, வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகம், பெண்கள் விடுதலையை உணர்த்திய பாரதியின் கும்மியும் உழுவர் நடனமும் போன்ற கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களின் கண்களை கவர்ந்திழுந்தன.

தமிழ்த் தின போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவினைத் தொடர்ந்து இறுதியாக கல்லூரியின் உப அதிபரின் நன்றியுரையோடு நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

# கலை பண்பாட்டு விழா

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

இளைஞர் அபிவிருத்தி அகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் 12வது கலை பண்பாட்டு விழா திங்கட்கிழமை 07.11.2022 காலை 9 மணிக்கு தோப்பூர் பாட்டாளிபுரம் இளைஞர் வள நிலையத்தில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.




இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் பொன் சற்சிவானந்தம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வளநிலைய மண்டபம் திறந்து வைப்பு. தமிழ் மொழி வாழ்த்து, பிரதேசத்தின் மூத்த கவிஞர் பரம்சோதி பற்றிய நினைவுரை, கலை நிகழ்வுகள், கவியரங்கு, கலைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஊடகத்துறையினரைக் கௌரவித்தல், விழிப்புணர்வு விவாத அரங்கு, வில்லுப்பாட்டு உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரண்யா சுதர்ஸன் கலந்துகொள்கின்ற அதேவேளை மூதூர் உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. கருணாகரன், சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்களான வி. குணபால, வி. கோணேஸ்வரன், கே. அன்பழகன், மூத்த எழுத்தாளரான கே. தேவகடாட்சம் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளனர்.

# மீராமொஹிதீன் தாஹிர் சமாதான நீதிவானாக நியமனம்



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சம்மாந்துறை கிழக்கு ஜே புளக் மல்கம்பிட்டி வீதியைச் சேர்ந்த மீராமொஹிதீன் தாஹிர் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தாஹிர், கல்முனை மாவட்ட நீதிவான் ஏ.எம் முஹம்மட் றியாழ் முன்னிலையில் சமாதான நீதிவானுக்கான சத்தியப் பிரமாணத்தை செய்து கொண்டு பொறுப்பேற்றுக் கொண்டார்.

வன பரிபாலனத் திணைக்களத்தின் அலுவலரான தாஹிர் பல்வேறு சமூக நல அமைப்புக்களில் இணைந்து கொண்டு பொது நல செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கோகலை அமைப்பாளராக அஸாம் ரபீக் நியமனம்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கோகலை மாவட்ட அமைப்பாளராக அஸாம் ரபீக் அவர்கள் முன்னாள் இலங்கையின் 6வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் 30/10/2022 அன்று கொழும்பில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நியமனம் வழங்கி வைக்கப்பட்டது, இச்சந்தர்ப்பத்தில் கேகாலை மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் மற்றும் பாரளுமன்ற உறுப்பினர் கௌரவ துஷ்மன்ந்த மித்ரபால அவர்களும் கலந்து கொண்டர்.

கேகாலை மாவட்ட அமைப்பாளர் அஸாம் ரபீக் அவர்கள் மாவனல்லை பிரதேச சபை உறுப்பினறுமாவர், இவர் மடுள்போவை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும், ஹெம்மாதகம அல் அஸ்ஹர் கல்லூரியில் தனது உயர்கல்வியையும் பயின்ற இவர், ஓய்வு பெற்ற ஆசிரியர் மர்ஹூம் ஏ. ஆர். எல் எம்.ரபீக் தம்பதிகளின் புதல்வரும், கோகலை மாவட்ட முன்னாள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் யூ. எல். எம். அலி பாரூக் அவர்களின் சகோதரியும் மகனும், அமுருப்ப மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசலின் பிரதம நம்பிக்கையாளரும், அல் அஸ்ஹர் தேசிய கல்லூரியின் அபிவிருத்திச் சங்கம் செயற்குழு உறுப்பினருமாவார்.

# முன்னாள் அமைச்சர் மன்சூர் பிரசவித்த குழந்தைக்கு அதாஉல்லா எம்.பி உரிமை கோருகிறார்

## – அக்கரைப்பற்றில் எழும் எதிர்ப்பு குரல்



(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் வர்த்தக வாணிப அமைச்சர் கலாநிதி ஏ.ஆர்.எம். மன்சூர் ஆரம்பித்து வைத்த அக்கரைப்பற்று வைத்தியசாலையை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல். எம். அதாஉல்லா தான் ஆரம்பித்து வைத்ததாகவும்இ அவரே தான் ஸ்தாபகர் எனவும் பொய்யான தகவல்களை பரப்பி வருகின்றனர். இது அப்பட்டமான பொய்யாகும். வரலாற்றை யாராலும் மறைக்க முடியாது. உண்மைகளை யாரையும் மறைக்க அனுமதிக்க முடியாது என அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் முன்னாள் அபிவிருத்தி சபையினர் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் வர்த்தக வாணிப அமைச்சர் கலாநிதி ஏ.ஆர். எம். மன்சூர் அவர்களின் ஆலோசகரும், முன்னாள் அமைச்சர் அதாஉல்லாவின் முன்னாள் இணைப்பாளருமான எம்.ஐ.ஏ.ஆர். புஹாரி, ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர் எல். எம். இஸ்மாயில், முஸ்லிம் வாலிப முன்னணியின் முன்னாள் தேசிய தலைவர் எம்.ஐ. உதுமாலெப்பை ஆகியோர் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்கள்இ யுத்தம் காரணமாக சேதமாகி இருந்த பொலிஸ் நிலையம் அமைந்திருந்த இடத்தில் பல்வேறு முயற்சிகளை செய்து 1990.09.13 அன்று இந்த வைத்தியசாலையை உருவாக்கினோம். அப்போதைய அமைச்சர் மன்சூர் அவர்கள் இந்த வைத்தியசாலையை உருவாக்க முழுமையாக பணியாற்றினார். நாங்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அப்போதைய சுகாதார அமைச்சர்களான ரேணுகா ஹேரத், ஏ.எச்.எம். பௌஸி, பீ. தயாரத்ன போன்றோர்கள் இந்த வைத்தியசாலைக்கு பெரியளவில் உதவி செய்தார்கள்.

கடந்த 2003ஆம் ஆண்டுவரை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இந்த வைத்தியசாலையை கட்டியெழுப்பினோம். இதனையெல்லாம் மறைத்து வரலாற்றை பொய்யாக்கும் வேலையை அண்மையில் வைத்தியசாலையில் நடைபெற்ற நிகழ்வில் அரங்கேற்றியுள்ளனர். இதனால் தான் உண்மைகளை எல்லோரும் அறிந்து கொள்ள நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளேன்.

இந்த வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழுவுக்கு கடந்த எட்டம்மாதம் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்கொல்லவினால் முன்னாள் பிரதியமைச்சர் மயோன் முஸ்தபாவின் சிபாரிசின் பேரில் நான் நியமிக்கப்பட்டும் இதுவரை இது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகம் எவ்வித மேலதிக நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. தகவலறியும் சட்டத்தின் மூலம் தகவல் கோரியும் முறையான பதில் கிடைக்கவில்லை. இந்த விடயத்தில் நீதி கோரி மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடும் வேலைகளை செய்து வருகிறேன். டாக்டர் ரக்கிஸ்து என்பவர் உண்மைக்கு புறம்பான தகவல்களை வைத்தியசாலை வரலாறாக உத்தியோகபூர்வ இணையத்தில் பதிவேற்றியுள்ளார். அவ்வளவும் அப்பட்டமான பொய்யாகும் என முன்னாள் வர்த்தக வாணிப அமைச்சர் கலாநிதி ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களின் ஆலோசகரும், முன்னாள் அமைச்சர் அதாஉல்லாவின் இணைப்பாளருமான எம்.ஐ.ஏ.ஆர். புஹாரி தெரிவித்தார்.

மேலும், அதாஉல்லாவின் இணைப்பாளராக இருந்த காலத்தில் தனது வாக்குகளுக்காக பேரியல் அம்மையாருக்கு அநியாயம் செய்து நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தை மக்களுக்கு கையளிக்கவிடாது தடுத்தமைஇ வட்டமடு காணியில் அவர் நடந்துகொண்ட விதங்களை கண்டுகொண்டமையினால் அவரிடமிருந்து விலகிக்கொண்டேன் . அவரது இணைப்பாளராக இருந்து நான் எவ்வித சலுகைகளையும் அனுபவிக்காதவன் என்ற அடிப்படையில் அவரது பிழைகளை பகிரங்கமாக சுட்டிக்காட்டுகின்றேன் என்றார்.

அதாஉல்லா அரசியல் அதிகாரம் பெற்ற பின்னர் சில பௌதிக வளங்களை உருவாக்கியுள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை. அதற்காக வைத்தியசாலையின் ஆரம்பகர்த்தா அவராகிவிட முடியாது. இந்த வைத்தியசாலையை உருவாக்க முன்னாள் அமைச்சர் மன்சூர் உட்பட பலரும் அனுபவித்த கஷ்டங்களை நாங்கள் ஆரம்பித்த கால உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் நன்றாக அறிவோம். ஒழுங்கான திட்டமிடல்கள் இல்லாது வைத்தியசாலையை சுருக்கி அதாஉல்லா மண்டபம், மாநகர சபை கட்டிடத்தை கட்டியுள்ளார்கள். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் அமைந்தால் இந்த வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக உருவாக்கும் எண்ணம் எங்களுக்கு இருந்தது.

வண்டிக்கு கீழால போகின்ற நாய் தான்தான் வண்டியை இழுத்து செல்வதாக எண்ணுவது போன்று சிலரின் நடவடிக்கைகள் இங்கு அமைந்துள்ளது. தமது சொந்த அரசியலுக்காக முன்னாள் அமைச்சர் தயாரத்னவை இனவாதியாக காட்டும் சிலர் அவர் முஸ்லிங்களுக்கு செய்த நல்லவிடயங்களை மறந்து விட்டார்கள் என்றனர்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# பிள்ளைகள் பெற்றாரை பின்பற்றுகிறார்கள்



எமது பிள்ளைகள் பெற்றோராகிய எங்களை போல இருக்க விரும்புகிறார்கள். நாங்கள் செய்வதையே செய்ய ஆசைப்படுகிறார்கள். நாம் அவர்களுக்கு மிக முக்கியமான ஆசிரியர்கள். எமது பிள்ளைகள் எம்மிடமிருந்து அதிகமான விடயங்களை கற்றுக்கொள்கிறார்கள்.

எமது பிள்ளைகள் நாம் செய்யும் ஒவ்வொரு சிறிய பெரிய விடயத்தையும் கவனிக்கிறார்கள். அவர்கள் எங்களது நல்ல மற்றும் கெட்ட நடத்தைகளை பார்ப்பதன் மூலமும் கேட்பதன் மூலமும் பின்பற்றுவதன் மூலமும் கற்றுக்கொள்கிறார்கள்.

கற்றல் முறைகள் பற்றி கல்வி உளவியலில் சில முக்கியமான நுற்பங்கள் காட்டித் தரப்பட்டுள்ளன.

அதில் ஒன்றுதான் மற்றவர்களை பின்பற்றுவதன் முலம் கற்றல்.

இது முக்கியமானதொறு கற்றல் முறையாகும்.

நாமும் மற்றவர்களை பின்பற்றுவதன் முலம் அவர்களது செயற்பாடுகளை பார்ப்பதன் முலம் பலதை கற்றிருப்போம். கற்றதை வாழ்வில் கடைபிடித் துமிருப்போம்.

நாம் எல்லோரும்போலவே எமது அழகான பிள்ளைப்பருவத்தில் புத்தகங்களில் இருந்து கற்றுக்கொண்டதைவிட பெற்றோரின் மற்றும் ஆசிரியர்களின் நடத்தை முறைகளையும் அவர்களது செயற்பாடுகளையும் கண்டு பலவற்றை கற்று வாழ்க்கை முறைக்குள் சேர்திருப்போம்.

வீட்டில் உள்ள பிள்ளைகள் பெரும்பாலும் தாயை, தந்தையை அல்லது மூத்தவர்களை பின்பற்றுகின்றனர்.

எதை பின்பற்றுகிறார்கள் என்றால் எல்லாவற்றையும் பின்பற்றுகிறார்கள்.

- நாம் பேசும் மொழியை
- பேசும் முறையை
-பேசும் விடயங்களை
- செய்கின்ற வேலைகளை
- செய்யும் முறைகளை
- பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் விதங்களை
- தீர்மானம் நிறைவேற்றும் நுற்பங்களை
- புத்திமதி மற்றும் ஆலோசனை வழங்கும் முறைகளை
- மற்றவர்களோடு உறவுபேணும் முறைகளை.. என பலதையும் பின்பற்றுகிறார்கள். பின்பற்றுவதோடு மட்டும் நின்றுவிடாமல் அவை சரியோ, பிழையோ அவற்றை சரியென்று ஏற்றுக்கொள்கிறார்கள்.

அன்பின் பெற்றார்களே!

எம்மையும் எமது ஒவ்வொரு செயற்பாட்டையும் எமது பிள்ளைகள் சரியென்று ஏற்றுக்கொண்டு அவற்றை பின்பற்றுகிறார்கள் என்றால்,

- நாமும் எமது செயற்பாடுகளும் எமது பிள்ளைகளால் பின்பற்றப்படுமளவிற்கு பொருத்தமானவையா?

- அவற்றை பின்பற்றுவதன் முலம் அவர்களால் அழகான ஆரோக்கியமான மனிதர்களாக ஆகமுடியுமா?

- எமது நடத்தைகளால் ஒரு அழகான ஆக்கபூர்வமான பரம்பரை உருவாக கைகொடுக்க முடியுமா?

இந்த வினாக்களை பலவிடுத்தம் நாம் கேட்டுப் பார்ப்போம்.

நாம் இறந்துபோனாலும் நாம் உருவாக்கிச்சென்ற நடத்தை முறைகள் இறந்துபோவதில்லை. அவை பல கோணங்களில் பிள்ளைகள் வாழ்வில் மாற்றமடையலாம். அவை பயனுள்ளவையாக எமது உறவுகளில் செல்வாக்கு செலுத்தலாம் அல்லது நோயுற்ற ஒரு பரம்பரை மண்ணில் வாழ வாய்ப்பாகவும் அமையலாம்.

இன்று எமது சமூகத்தில் பண்பாடு மோசமாகியிருக்கிறது என்றும் வாலிபர்கள், இளம்பருவத்தினர் கட்டுப்பாடு மீறி நடக்கின்றார்கள் என்றெல்லாம் அடிக்கடி சொல்லக்கேட்கிறோம்.

அதற்கான காரணம்...

- அவர்களது பிறப்பிலிருந்து அல்லது பிள்ளைப்பருவத்திலிருந்து பண்பாடற்ற நடைமுறைகளை கண்டதும் அவற்றை தொடர்ந்து பின்பற்றிவருவதுமாக இருக்கலாம்.

- வாழ்க்கையில் வெற்றிபெர தேவையானவை என்ன என்பதை சரியாக கொடுக்காமையும் எடுக்காமையும் மற்றொரு காரணமாகலாம்.

அன்பின் பெற்றார்களே!

எமது பிள்ளைகளுக்கு வாழ்க்கையை கற்றுக்கொள்வதற்கான மிகச்சிறந்த காட்சிப்பொருளாக, கற்றல் சாதனமாக நாம் இருக்கின்றோம் என்பதை நினைவில் நிறுத்தி எமது நடத்தைகளை நாணமுள்ளவையாக, மனதிற்கு மகிழ்வை தரக்கூடியனவாக பிள்ளைகள் விரும்பக்கூடியனவாக ஆக்கிக்கொள்வோம். அதன் மூலம் வளமான பரம்பரையொன்று மண்ணில் மலர விதையிட்ட நல்ல பெற்றிர்களாக நாங்ஜகள் ஆகலாம்.

# மாவனல்லை பதுரியாவில் மீலாத் விழாவும் கண்காட்சியும்









(எம்.எஸ். அமீர் ஹு்சைன்)

மதங்கள் எப்போதும் போதிப்பது சாந்தி, சமாதானம், நல்லிணக்கம் ஆகிய உயரிய பன்புகலையாகும் என்று மாவன்லை கதிரேசன் கோவில் பிரதம குருக்கல் சிவ ஸ்ரீ பாலபிரதீப் தெரிவித்தார்.

மாவனல்லை பதுரியா தேசிய கல்லூரியில் மாவனல்லை கல்வி வலய மட்ட மீலாத் விழாவும் அரபு எழுத்தணி கண்காட்சியும் அண்மையில் கல்லூரி அதிபர் ஏ.எல். அப்துர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற போது சிறப்பு பேச்சாளர்ராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். பாடசாலைகளில் மீலாத் விழா நடத்தப்பட வேண்டும் என்று கல்விக் காரியாலயத்தின் பணிப்புரைக்கமைய இந்த மீலாத் விழா நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மீழாத் நிகழ்வுக்கு முன்னர் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அரபு எழுத்தணி கண்காட்சியை மாவனல்லை வலய கல்வி காரியாலய அதிகாரி கோந்தேவெல தம்மதிஸ்ஸி தேரர், கிருங்கதெனிய மஸ்ஜிதுன் நூர் ஜூம் ஆப் பள்ளிவாசல் நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் முன்னால் தலைவர் ஹாபிழ் அஹமட் ஹூசைன் பின் நூரி உட்பட பலர் பங்குபற்றி ஆரம்பித்து வைத்தனர்.

அதன் பின்னர் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய குருக்கல் மேற்கண்டவாறு கூறினார். அவர் தெரிவிக்கையில் கூறிதாவது : நான் இந்தியாவில் உயர் கல்வி கற்றுள்ளேன். அக்காலப்பகுதியில் எனக்கு இந்தியாவில் இஸ்லாம் மதத்தோடு நிறை தொடர்பு இருந்தது. இஸ்லாம் ஒரு புனிதமான, சிறந்த மார்க்கமாகும். மானிட வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு தேவையான அத்தனை அம்சங்களையும் இந்த இஸ்லாத்தினுள் காண முடிகின்றது.


அதன் தூதர் முஹம்மத் நபிகள் நாயகத்தின் போதனைகள் மனித குழத்தின் மேன்மைக்கும் சிறப்புக்கும் சிறந்த வழிகாட்டல்களையும் முன்மாதிரிகளையும் கொண்டதாகும். இவ்வாறாக பார்க்கும் போது மதங்கள் ஒருபோது பிரிவனைகளுக்கோ முரண்பாடுகளுக்கோ வழிவகுப் பதில்லை. நாம்தான் எம்மில் பல காரணங்களின் அடிப்படையில் முரண்பாடுகளுக்குள் சிக்கி நிம்மதியற்றவர்களாக வாழ்கின்றோம். கடந்த காலங்களில் இலங்கையில் கூட இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம்கள் பாரிய சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்கினார்கள். அது மிகவும் கவலையான நிகழ்வாகும். மதங்கள் எப்போதும் சாந்தி, சமாதானம், சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் போன்ற உண்ணதமான பன்புகளை போதிக்கின்றன. நாமும் முஹம்மத் நபியவர்களின் உயர்வான பன்புகளை பின்பற்றி சிறந்த மனிதர்களாக வாழ்வோமாக என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வின் போது குருக்கள் மற்றும் தேரர் ஆகியோருக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ஏற்கனவே சபரகமுவ மட்ட மீழாத் நிகழ்வுகளில் பங்குபற்றி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்க ளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.





பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் விரைவில் குணம் காண வேண்டி கொழும்பு தெவட்டகஹ பள்ளி வாசலில் விசேட பிரார்த்தனை வெள்ளியன்று ஜும்ஆத் தொழுகையின் பின் இந்தப் பிரார்த்தனை இடம்பெற்றது.



பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகர், வர்த்தகம் மற்றும் முதலீட்டு இணைப்பாளருடன் இலங்கை வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவை கடந்த வியாழனன்று (03) சந்தித்தார். வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை வர்த்தக திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். பாகிஸ்தான் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட முதலாவது நாடு என்ற வகையில் இலங்கைக்கு பல சாதகமான சலுகைகள் உள்ளதாக சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர், பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இருதரப்பு வர்த்தகத்தை மேலும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

# தேவையுடைய பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவிகளுக்கு காப்போம் நிறுவனம் நிதியுதவி!

[அபு அலா]

தந்தையிழந்து மிகவும் வறுமைக்கோட்டின்கீழ் கல்விகற்று யாழ். பல்கலைக்கழக கலைப்பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்ட முள்ளிவாய்கால் - உடையார்கட்டு பிரதேசத்தைச் இரு மாணவிகளின் உயர்படிப்பை கஷ்டமின்றி தொடர்வதற்கு இலங்கை காப்போம் தொண்டு நிறுவனம் நிதியுதவிகளை வழங்கி வைத்துள்ளது.



இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் (திலீப்) உள்ளிட்ட குழுவினர் முள்ளிவாய்கால் - உடையார்கட்டு பிரதேசத்திலுள்ள சு. சங்கவி மற்றும் த. கிந்துஜா என்ற இரு மாணவிகளின் இல்லம்தேடிச் சென்று தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் முதற்கட்டமாக இந்த நிதியுதவிகளை வழங்கி வைத்துள்ளனர்.



சப்னி அஹமட்



# நியாயத்தின் பக்கம் நிருபமான நீதி!



ஈஸ்டர் குண்டு தாக்குதல் வழக்குகளிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை விடுவித்து விடுதலை செய்வதாக கோட்டை நீதவான் நீதிமன்றம் புதன்கிழமை (02) அறிவித்துள்ளது.

பயங்கரவாத சட்டத்தின் கீழ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியூதீன் கடந்த 2021ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நள்ளிரவில், அவரின் கொழும்பு இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டு அதே வருடம் ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி அதாவது சுமார் 07 மாதங்களின் பின் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

2019ஆம் ஆண்டு முழு நாட்டை உளுக்கிய ஏப்ரில் 21ஆம் திகதி தாக்குதலின் போது, அந்த தாக்குதலுடன் தொடர்புடைய நபர்களுக்கு உதவி இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட ரிஷாட் பதியுதீனை 07 மாதங்களாக சரியான விசாரணைகள் இல்லாமல் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்த கைதுக்கு எதிராக ரிஷாட் பதியுதீன் “தான் இந்த தாக்குதலுடன் எந்த சந்தர்ப்பத்திலும் தொடர்புகள் இல்லை” என சுட்டிக்காட்டி தாக்கல் செய்த அடிப்படைமீறல் உரிமை வழக்குதல் தாக்கல் செய்திருந்த நிலையில் அந்த வழக்கின் விசாரணைகள் மீதான தீர்ப்பின் போது நீதிவான மன்றில் அறிவித்தார்.

பலர் எதிர்கணைகளுக்குள் அரசியலை செய்த ரிஷாட் பதியுதீனுக்கு பெருமான்மை சமூகத்திற்குள் இனவாதியாகவும், சிங்கள மக்களுக்கு எதிரானவர் என சித்தரிப்பதற்கும் மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும், ராஜபக்ஷ குடும்பமும் கடந்த 52 நாள் அரசியல் ஆட்டத்தின் பின் மேற்கொண்ட ரிஷாத்துக்கு எதிரான பழிவாங்கல்கள் என நீதிமன்றத்தின் சுயாதீன தன்மை ஊடாக தெளிவாக புலனாகின்றது.

ஏலவே, வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட சமூகத்தை வாக்களிப்பதற்காக பஸ் வாககங்களை பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்து சிறையில் அடைத்திருந்தாலும் அந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததிருந்ததுடன், இந்த ஈஸ்டர் தாக்குதல் வழக்கையும் நீதிமன்ற தள்ளுபடி செய்ததன் மூலம் ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் மேற்கொண்ட அரசியல் பழிவாங்கல் திட்டத்தை தெளிவாக எடுத்துக்கட்டியது.

**நள்ளிரவில் தீவிரவாதி போல் ரிஷாத்தை கைது செய்த கடந்த ஆட்சி!**

முஸ்லிம்களின் கடமைகளில் ஒன்றான புனித ரமலான மாதம் இரவு அதாவது 2021ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நள்ளிரவு கைது செய்யப்பட்டிருந்தார்.

அன்றைய தினம் 12 மணி முதல், திடிரென ரிஷாத் பதியுதீனின் இல்லத்தை சூழ்ந்த இலங்கை குற்றப்புலனாய்வு பிரவினர் அவரின் வீட்டை முற்றுகை இட்டு, மிகப்பெரிய தீவிரவாதி போல் கைது செய்ய முயற்சித்து இறுதியில் அவரின் இல்லத்தை சுற்றியுள்ள மதில் மேல் ஏறி வீட்டுக்குள் புகுந்து அதிகாலை 03 மணிற்கு கைது செய்து அழைத்துச்சென்றனர். அதே இரவு அவரின் சகோதரர் ரியாஜ் பதியுதீனையும் எந்த முன்னறிவித்தல் இன்றியும் கைது செய்து சுமார் ஒரு வருடமாக சிறைப்பட்டுத்தப்பட்டிருந்தனர்.

ரிஷாட் பதியூதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியூதீன் ஆகியோர் அதிகாலை கைது செய்யப்பட்டதாக அன்றைய போலீஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி போலீஸ் மாஅதிபர் அஜித் ரோஹண அனைத்து ஊடகங்களுக்கு “முக்கிய செய்தியாக” அறிவிருத்து இலங்கை நாட்டை பரப்பரப்பாக்கி இருந்தார் குறித்த செய்தியில் இலங்கையில் 2019ம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் தின வெடிகுண்டு தாக்குதலில் தற்கொலை குண்டுத்தாரிகளுக்கு ஆதரவு வழங்கியதாகவும், அவர்களுடன் தொடர்புகளை பேணியதாகவும் குற்றம்சாட்டப்பட்டு இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்ட தாகவும், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் சரத்துக்களுக்கு அமையவே, ரிஷாட் பதியூதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியூதீன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அன்று கூறினார்.

அவரை அன்று நள்ளிரவு கைது செய்ய குற்றப்புலனாய்வு பிரிவு 3 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்றிருந்தனர். அவ்வாறு அனுமதியை பெற்றிருந்த குற்றப்புலனாய்வு பிரவினர் அவரிடம் எந்தவிதமான விசாரணைகளை நடத்தாமல், 03 நாட்கள் முடிந்த பின் மீண்டும் 90 நாட்கள் என்ற அடிப்படையில் 02 தடவைகள் அதாவது 06 மாதமாக தடுத்து வைத்து விசாரிக்க வேண்டும் என்ற அனுமதியை இலங்கை நாட்டின் அன்றைய ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ வழங்கிய கடிதம் ஒன்றை இலங்கை குற்றப்புலனாய்வு பிரவுக்கு பாதுகாப்பு அமைச்சு வழங்கி இருந்தது.

சுமார் 07மாதம் குற்றப்புலானாய்வு பிரிவின் விசாரணைக் கு உட்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்ற விவாதத்தின் அடிப்பட்டையில் 07 மாத சிறை வாழ்க்கைக்கு பின் 2021 ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

குற்றச்சாட்டை நிராகரித்த ரிஷாத் பதியுதீனினும், பாராளுமன்ற சிறப்புரிமை மீறலும்

“தான் ஈஸ்டர் குண்டு தாக்குதலுடன் எந்நேரத்தில் தொடர்பு இல்லை நான் அனைத்து விசாரணைக்கும் தயாராக இருப்பதாகவும். என் மீது தவறு இருந்தால் நீதிமன்றில் என்னை ஒப்படைக்குமாறும், தப்பு செய்தால் என்ன தூக்கிலிடுமாறும்” ரிஷாத் பதியுதீன் நாடாளுமன்றில் உரையாற்றி இருந்தார்.

பாராளுமன்றில் உரையாற்றும் போதெல்லாம் தன்னை அநியாயகாக சிறைப்படுத்தல் செய்துள்ளதாகவும், தன்னை விசாரிக்காமல் சிறையில் சும்மா அடைத்து வைத்ததாக அடிக்கடி குற்றஞ்சாட்டி இருந்தார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென உள்ள சிரப்புரிமை கூற ரிஷாத் பதியுதீன் கைது காலத்தில் நிராகரிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட ஆரம்ப காலத்திலிருந்து ரிஷாத் பதியுதீனை பாராளுமன்ற அழைத்து வரப்பட்டது கூட மிகப்பெரிய போராட்டமாகவே காணப்பட்டது. மொட்டுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களால் ரிஷாத் பதியுதீனை பாராளுமன்ற அழைத்து வரக்கூடாது எனவும் பாராளுமன்றத்தில் அமளிதுமளியை ஏற்படுத்தி இருந்தனர். குறிப்பாக அன்றைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சரத் வீரசேக பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ரிஷாட் பதியுதீனை பாராளுமன்ற அழைத்த்து வர முடியாது எனவும் கூறியிருந்தார், அவ்வாறு பாராளுமன்றம் அழைத்து வரப்பட்டாலும் கொவிட் காலம் என்பதால் இலங்கையில் எவரும் பாவிக்காத புதிய ஆடையை கூட தயார் செய்து ரிஷாத் பதியுதீனுக்கு வழங்கி கொடுமை செய்ததை நாம் அனைவரும் அறிந்ததே.

மேலும், பாராளுமன்றில் ரிஷாத் பதியுதீனுக்கு உரையாற்றுவதற்கு கூட சபாநாயகரினால் சரியான நேரம் ஒதுக்கப்பட்டாமல் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறெல்லாம் பழிவாங்கல் செய்யப்பட்ட வழக்கை நீதிமன்ற தள்ளுபடி செய்துள்ளது.

---



அப்ரா அன்சார்

# களுத்துறை மாவட்ட அரசியலில் நிச்சயம் பிரவேசிப்பேன்!

## “வளர்ந்துவரும் இளம் அரசியல்வாதி” விருதுபெற்ற சாதிக்!

**1.உங்களை பற்றிய சிறு அறிமுகம் மற்றும் அரசியலில் கால்பதிக்க வேண்டும் என்று உங்களை தூண்டிய காரணங்கள் எவை?**

நான் அஹ்மத் சாதிக், பேருவளையை பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன். அல்ஃபாஸ யத்துள்நஸ்ரியா முஸ்லிம் பாடசாலை ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து தரம் இரண்டிலிருந்து உயர் தரம் வரையில் அல்-ஹூமைஸ்சரா தேசிய பாடசாலையில் கற்று களனி பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் கணக்கியல்துறையில் உயர்கல்வியினை முழுமைப்படுத்தினேன். அத்தோடு ஊஜஆ கற்கை நெறியின் இறுதி நிலையில்இருக்கிறேன். தற்போது ஒரு தனியார் நிறுவனத்தின் கணக்காளராக பணிபுரிகிறேன்.

**2.இளைஞர் பாராளுமன்றத்திற்கு எப்போது தெரிவாகினீர்கள் அதன் பின் மேற்கொண்ட சேவைகள் பற்றி கூறமுடியுமா?**

2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இளைஞர் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. இதுவரையில் 4 இளைஞர்பாராளுமன்றங்கள் நிறைவுற்றிருக்கின்றன.

பிரதேச வாரியாக முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள், இளைஞர் கழகங்களை ஒன்று சேர்த்து இளைஞர் கழகங்களினூடாக சமூக நலன் பேணக்கூடிய செயற்பாடுகள், விளையாட்டு, ஆன்மீகம், தலைமைத்துவம்போன்றவை தொடர்பான செயற்பாடுகள் ஆகியவற்றை பிரதேச வாரியாக முன்னெடுத்தல்.

அதேபோல் வெளிவிவகார பிரதியமைச்சர் என்ற ரீதியில் என்னுடைய தனிப்பட்ட முயற்சியால் இதுவரையில் 25 இற்கும் மேற்பட்ட உயர்ஸ்தானிகர்களை, தூதுவர்களை



சந்தித்து மாவட்ட ரீதியில், தேசிய ரீதியில் செயல்படுத்தஇயலுமான வேலைத்திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறேன். அதற்கு ஒரு உதாரணமாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து 3 மில்லியன் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் களுத்துறைமாவட்டத்தில் உள்ள 5 பாடசாலைகளுக்கு வழங்கியதை குறிப்பிடலாம்.

**03.”வளர்ந்து வரும் இளம் அரசியல்வாதி” விருதினை அண்மையில் பெற்றீர்கள்.இது எவ்வாறு கிடைத்ததுஎன்பதை கூற முடியுமா?**

New Generation Awards என்னும் இந்த விருதானது இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் ஒவ்வொருவருடமும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் இளைஞர்களுக்கு வழங்கப்படுகின்றது.

சமூகம் தொடர் பான செயற்பாடு களுக்கும் என்னுடைய தலைமைத்துவ செயற்பாடுகளுக்கும் சேர்த்து “வளர்ந்துவரும் இளம் அரசியல்வாதி” என்ற விருதை பெறுவதற்கு தேசிய ரீதியில் நான் தெரிவு செய்யப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகஇதுவரையில் நான் செயற்பட்டதையும் தாண்டி என் எதிர்கால நடவடிக்கைகளுக்கான ஊக்குவிப்பாக இந்தவிருது அமையும் என நினைக்கிறேன்.

**04. எதிர்காலத்தில் களுத்துறை மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி அரசியலில் களமிறங்கும்யோசனைகள் உள்ளதா? உங்களுடைய மாவட்டத்துக்கான சேவைகளை**



**தயார்படுத்தி வைத்துள்ளீர்களா?**

நிச்சயமாக, எதிர்காலத்தில் களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியோ அல்லது இலங்கைஅரசியலில் செயற்படுவதற்கான யோசனை உள்ளது. ஆனால் எனது தனிப்பட்ட கல்வி மற்றும் தொழில் ரீதியானமுன்னேற்றங்களை அடைந்த பின்பே அரசியலில் ஈடுபடுவது சாத்தியமாக இருக்கும்.

என்னுடைய மாவட்டத்திற்கு மாத்திரமல்ல தேசிய அளவில் இளைஞர்களின் முன்னேற்றம் தொடர்பானமுயற்சிகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்கிறேன்.

கல்விகற்ற சாதாரண இளைஞர் என்ற ரீதியில்மாவட்டத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக கரிசனை கொண்டிருக்கிறேன். இதற்கு உதாரணமாகபேருவளை இளங்கலை பட்டதாரிகள் அமைப்பு (Undergraduate Association of Beruwala) 4 வருடங்களுக்குமுன்னதாகவே நிறுவப்பட்டதும் களுத்துறை மாவட்டத்தில் அனைத்து துறைகளிலும் உள்ள இளைஞர்களைஉள்ளடக்கிய இலங்கை மாதிரி இளைஞர் அணி அமைப்பு (Sri Lanka Model Youth Force) 3 வருடங்களுக்குமுன்னதாகவே உருவாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**05.அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் எந்தக் கட்சியில் நீங்கள் போட்டியிட விரும்புகிறீர்கள்?**

அரசியலில் கால்பதிக்க சந்தர்ப்பம் கிடைத்தால் எந்த கட்சியில் இணைந்து கொள்வது என்பது பற்றி இன்னும் நான் தீர்மானிக்கவில்லை. சமூகம் சார்ந்த சிந்தனையில் உருவாக்கப்பட்ட என் தனிப்பட்ட கொள்கைகள்மற்றும் குறிக்கோள்கள் ஆகியவற்றை ஆதரித்து செயலாற்றக்கூடிய கட்சிகளோடே இணைந்துசெயலாற்றுவேன்.

**06.பல்கலைக்கழகத்தில் இருந்து உருவான ஒரு இளம் தலைவர் எனும் வகையில் முஸ்லிம் சமூகத்தில்காணப்படும் பிளவுகளை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

இலங்கையில் உள்ள ஒவ்வொரு சமூகங்களிடையேயும் பிளவுகளை எங்களால் அவதானிக்க முடியும். அந்தவகையில் முஸ்லிம் சமூகத்திலும் அவ்வாறான பிளவுகள் உள்ளன. இது ஒரு பலவீனமானநிலைப்பாடாகும். இந்த நிலையை பல்கலைக்கழகத்தில் இருந்தும் அவதானித்தேன் இன்று இளைஞர்பாராளுமன்றத்தில் இருந்து கொண்டும் அவதானிக்கிறேன். ஒவ்வொரு தனிநபர்களுக்கு இடையிலானபிளவுகளே சமூகத்திற்கிடையிலான பிளவுகளாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே முன்னேற்றத்தைநோக்கி செல்லும் சமூகம் இவ்வாறான பிளவுகளிலிருந்து தவிர்ந்து ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும்.

# மக்கள் ஆணையை இழந்த பாராளுமன்றைக் கலைத்து உடனடியாக தேர்தலுக்குச் செல்லுங்கள்!

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கோரிக்கை!




தற்போது ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கமும் ஜனாதிபதியும் மக்கள் ஆணையை இழந்த அரசாங்கமாகும். எனவே, உடனடியாக பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்லுமாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் கோருகிறது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று 31.10.2022 திங்கட்கிழமை அன்று மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் நடைபெற்றது. இதன்போது ஙேபுபுயின் பிரதித் தவிசாளர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் "தனிநபர்களின் தேவைகளுக்காகவே காலத்திற்குக் காலம் அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் அடிப்படையிலேயே இன்று 21யு என்கின்ற அரசியல் யாப்பு சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், மக்கள் கடந்த பல மாதங்களாக நடாத்திய போராட்டங்களின் மூலம் மொத்த அரசியல் முறைமையையும் மாற்றக்கூடிய சமூக நல அரசியல் யாப்பு மாற்றத்தையே கோரியிருந்தனர். அவர்கள் ஜனாதிபதியை,பிரதமை மாத்திரமன்றி நாடாளுமன்றத்தையே கலைத்து புதிய அரசியல் சீர்திருத்தத்தை செய்யும்படியே கோரியிருந்தனர்.

எனினும் கண்துடைப்பிற்காக ஒரு சில மாற்றங்களை மாத்திரம் செய்து மீண்டும் தங்களது அரசியல் நலன்களை பாதுகாக்கும் யாப்பு சீர்திருத்தங்களையே தற்போதைய அரசாங்கமும் கொண்டு வந்துள்ளது. எனவே மக்கள் ஆணை இல்லாத இப்பாராளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட்டு தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும்.

அத்துடன் நாடு இன்று பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை சந்தித்து வருகின்றது. புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பதவியேற்ற போது, நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு தன்னிடம் பல திட்டங்கள் இருப்பதாக கூறியிருந்தார் .உல்லாசப்பயணத் துறையை அபிவிருத்தி அடையச் செய்வதன் மூலமும் ஐஆகு கடனுதவிகளை பெற்றுக் கொள்ளவும் தன்னால் முடியும் என அவர் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். எனினும் அவர் பதவியேற்று பல மாத காலங்கள் கடந்துள்ள நிலையில் எதிர்பார்த்த உல்லாசத்துறை வருமானங்களோ ஐஆகு கடனுதவிகளோ கிடைக்கப்பெறவில்லை.நாட்டின் இன்றைய பின்டைவுக்கு வழிவகுத்த காரணங்களில் ஒன்று

முன்னாள் அரசாங்கம் அளித்த வரி சலுகையும் ஆகும். ஆனால் அவ்வரிச்சலுகையினால் பொதுமக்கள் அன்றி பெரும் பெரும் நிறுவனங்களே இலாபங்களை ஈட்டியிருந்தன. எனினும் தற்பொழுது அந்நிறுவடங்களிடம் செலுத்தத் தவறிய வரிகளை மீள செலுத்துமாறு பணிக்காத அரசாங்கம், எந்தவித நியாயமான அடிப்படைகளும் இன்றி மக்களின் வரிச் சுமைகளை மீண்டும் அதிகரித்து அவர்களின் அன்றாட வாழ்க்கையினை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது..

அது போலவே உல்லாசப்பயணிகளை கவரும் விதமாகவோ, அத்துறையினை அபிவிருத்தி செய்யும் வகையிலோ எவ்வித திட்டங்களும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. இதனால் உல்லாசப்பயணத்துறையும் வீழ்ச்சியடைந்து டொலர் கையிருப்பு மிகக் குறைவடைந்துள்ளது .பங்களாதேஷ்., இந்தியா போன்ற நாடுகளும் கூட எமது நாட்டு வங்கிககளுடனான தொடர்புகளை நிறுத்தியுள்ளன.எனவே இந்த பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளுக்கு ஆங்காங்கே பொருத்துக்களை போடுகின்ற திட்டங்களை விடுத்து ஜனாதிபதி முழுமையான தீர்வினை காணக்கூடிய திட்டங்களை வகுக்க வேண்டும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வேண்டுகோள் விடுக்கின்றது .

அத்துடன்,நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக ஒரு சில காலங்களுக்கு மாத்திரம் நடைமுறையில் இருக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டமானது, பிற்பட்ட காலங்களில் குறித்த "ஷரத்து" மிக லாவகமாக நீக்கப்பட்டு நிலையான சட்டமாக இந்த நாட்டில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் இதன் மூலம் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு இருந்தனர். பிற்பட்ட காலங்களில் முஸ்லிம்களும் தற்பொழுது இந்த நாட்டில் அரசாங்கத்திற்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராடுகின்ற எவராக இருப்பினும் அவர்களை கைது செய்வதற்கு வசதியான ஒரு சட்டமாக இந்த சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே இச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதை விடுத்து முழுமையாக இச்சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும் நல்லாட்சிகான தேசிய முன்னணி அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றது " எனவும்அவர் தெரிவித்தார்.

# கல்முனை அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தின் மாணவ பாராளுமன்ற நிகழ்வு





(எஸ்.அஷ்ரப்கான்)

சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாணவர் பாராளுமன்ற அமர்வு பாடசாலையில் அதிபர் ஏ.எச். அலி அக்பர் தலைமையில், பொறுப்பாசிரியர்களின் வழிநடாத்தலில் சிறப்பாக இடம் பெற்றது.

இக்கன்னி பாராளுமன்ற அமர்விற்கு பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். ச/ஹதுல் நஜிம், கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எச். பௌஸ், வி.ஜிஹானா ஆலிஃப் ஆகியோரும், விசேட அதிதிகளாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி.எம். சம்சம், ஆசிரியர் ஆலோசகர் பி.ரீ.எம். மஹ்ரூப் ஆகியோரும் மற்றும் பாடசாலை பிரதி அதிபர்களான எம். ஆர்.எம்.நௌஸாட், எம்.எஸ்.எம்.றிஸ ானா ஆகியோரும் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு பாராளுமன்ற நடைமுறைகளை அடியொட்டிய மாணவர் பாராளுமன்ற நடவடிக்கைகளை தெரிவு செய்யப்பட்ட மாணவர் பாராளுன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இணைந்து வெளிப்படுத்தினர்.

# மகளிர் ரக்பி போட்டியில் சம்பியனானது ஜயவர்தனபுர பல்கலை மகளிர் அணி



(அஷ்ரப் ஏ. சமத்)

அரசாங்கத்தின் சார்பாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் இலங்கையில் மாவட்ட மட்டத்தில் ரக்பி போட்டிகளுக்கு அனுசரணை வழங்கியது.

தேர்ஸ்டன் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதியாக நடைபெற்ற போட்டியில் மொத்தம் எட்டு மகளிர் அணிகள் பங்கேற்றன. இதன் போது கண்டி, காலி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் போட்டிகள் நடைபெற்றன. இறுதிச் சுற்று கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஜயவர்தனபுர பல்கலைக்கழக மகளிர் ரக்பி அணி சம்பியனாகவும், கொத்தலாவெல பாதுகாப்பு பல்கலைக்கழக மகளிர் ரக்பி அணி இரண்டாம் இடத்தையும், சப்ரகமுவ பல்கலைக்கழக மகளிர் ரக்பி அணி மூன்றாம் இடத்தையும் பெற்றது.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனர்த்த முன் ஆயத்த ஒத்திகை நிகழ்வு




(சியாத்.எம்.இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனர்த்த முன் ஆயத்த ஒத்திகை நிகழ்வு (Disaster Response Drill) வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை (04) நடைபெற்றது.,

வைத்திய அத்தியட்சகர் டொக்டர். ஜி.போல் ரொஷான் மேற்பார்வையில் சுகாதார அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ எதிர் நடவடிக்கைப் பிரிவிலிருந்து (னுளையளவநச ஆயயெபநஅநவெ சுநளிழளெந னுைளைழைெ) டொக்டர். நோவில் விஜேசேகர மற்றும் அனர்த்த முகாமைத்துவ முகாமைத்துவ வைத்திய அதிகாரி டாக்டர். விராஜி விக்ரமசிங்க ஆகியோரினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில், அவசர சிகிச்சைப் பிரிவு, வெளிநோயர் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, மயக்கயவில் பிரிவு, நீதித்துறை மருத்துவ பிரிவு ஆகிய பிரிவுகளில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகள், தாதி உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக இடம்பெற்றது.

திடீர் அனர்த்தம் ஒன்று எதிர்பாராதவிதமாக நடைபெறுகின்ற சமயத்தில் பொதுமக்களின் உயிர்களை பாதுகாக்கும் நோக்கில் வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்கள் முன் ஆயத்த தயார்படுத்தல்கள், முதலுதவி மற்றும் சுகாதார சிகிச்சையளிப்பு எவ்வாறு நடைபெற வேண்டும் என்ற ஒத்திகை நிகழ்வு சிறப்பாக நடந்தேறியது.

இந்த ஒத்திகை நிகழ்வில், பங்குபற்றிய வைத்தியசாலை ஊழியர்களுக்கும் ஏற்பாடு செய்த வைத்தியர் விராஜி விக்ரமசிங்கவுக்கும் வைத்திய அத்தியட்சகர் டொக்டர். ஜி.போல் ரொஷான் நன்றி தெரிவுத்துக் கொண்டதுடன் நிகழ்ச்சியின் நிறைவில் கலந்து கொண்டவருக்கும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

# கல்முனை வலய பாடசாலைகளுக்கு புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் விநியோகம்




கல்முனை கல்வி வலயத்திலிருந்து தரம் ஐந்து புலமைப்பரிசில் சாதனையாளர்களை உருவாக்கும் நோக்கில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக நுனர குசநந யுஉயனநஅல யினால் தரம் 05 யில் கல்வி பயிலும் இவ்வாண்டு (2022) புலமை பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான இலவச வினாத்தாள்கள் கல்முனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் உப தலைவரும், நுனர குசநந யுஉயனநஅலயின் கல்முனை பிரதேச இணைப்பாளருமான எம்.என்.எம். அப்ராஸினால் பாடசாலைகளுக்கு இன்று வழங்கி வைக்கப்பட்டது

நுனர Free Academy பணிப்பாளர்களான ஐ.எம்.றொஸ ான் மற்றும் பாத்திமா ஸஹ்ரா நிஸ்பர் ஆகியோரின் வழிகாட்டுதலில், கல்முனை கல்வி வலயத்தில் ஆரம்பகட்டமாக தெரிவு செய்யப்பட்ட கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கு இந்த வினாத்தாள்கள் வழங்கி வைக்கப்பட்டது.

முதல்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட கல்முனை கிரீன் பீல்ட் கமுஃகமுஃ ரோயல் வித்தியாலயம், சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம். எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயம், மாளிகைக்காடு கமு/கமு/ சபீனா முஸ்லிம் வித்தியாலயம் போன்ற பாடசாலை அதிபர்களிடம் இந்த மாதிரி புலமைப்பரிசில் வினாத்தாள்கள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டதுடன் புலமைப்பரிசில் பரீட்சை எழுதவிருக்கும் மாணவ, மாணவிகளுக்கு மாதிரி முன்னோடி பரீட்சையும் நடாத்தி வைக்கப்பட்டது.

இனிவரும் காலங்களிலும் தொடர்ந்தும் இந்த சேவையை முன்னெடுக்கவுள்ளதாகவும் ஏனைய பாடசாலைகளுக்கும் நுனர குசநந யுஉயனநஅலயின் இந்த இலவசமாக மாதிரி புலமை பரீட்சை வினாத்தாதாள்கள் விநியோகம் செய்யவுள்ளதாகவும் இணைப்பாளர் எம்.என்.எம்.அப்ராஸ் தெரிவித்தார்.

# பெருந்தோட்ட வீடுகளுக்கு சட்டரீதியான உறுதிப்பத்திரத்தை வழங்க கோரி நுவரெலியாவில் போராட்டம்!








**(செ.திவாகரன்)**

1987 ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்ட 37,000 பெருந்தோட்ட வீடுகளுக்கு சட்டரீதியான உறுதிப்பத்திரத்தை வழங்குமாறு கோரி கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தினரும், சில சிவில் அமைப்புகள் இணைந்து நேற்று (06) ஞாயிற்றுக்கிழமை காலை நுவரெலியா பிரதான அஞ்சல் அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது

இதன்போது போராட்டக்காரர்களால் எமக்கு வேண்டும் தனி வீடுகள் 37000 ஆயிரம் வீடுகளுக்கு உறுதிபத்திரம் வழங்கு , தோட்ட தொழிலாளர் இந்த நாட்டின் பிரஜைகள் என்றும் அவர்கள் சமமாக மதிக்கப்பட வேண்டும்,

எமது நில உரிமையை உடனடியாக பெற்று தாருங்கள்,பழமையான வீட்டு வாழக்கை போதும் போன்ற எதிர்ப்பு பதாகைகளை ஏந்திய வண்ணம் போராட்டகாரர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் 1987 ஆம் ஆண்டின் பின்னர் பெருந்தோட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளுக்கு வீட்டுரிமைப் பத்திரங்களை வழங்குமாறு கோரி ஜனாதிபதிக்கு கையளிப்பதற்கான மகஜர் ஒன்றில் கையொப்பங்கள் திரட்டுவதற்கு நுவரெலியா பிரதான பேருந்து தரிப்பிடம், அஞ்சல் அலுவலகத்திற்கும் முன்பாக நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டது

---



**நேர்காணல்:**
**செ.திவாகரன் நானுஓயா**

# தங்கம் வென்ற ஆணழகன் ஷங்கர்கணேஸ்!




ஜிம் சென்று உடலை தொடர்ந்து வலுவாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் ஜிம்மில் சேர்ந்தார் ஷங்கர்கணேஸ் ஜிம்மில் சேர வேண்டும் என்ற மன உறுதி அவரைத் தற்போது தங்க பதக்கம் வென்று உடல் கட்டழகு மற்றும் உடற்கட்டமைப்பு கொண்டவரும் வறுமை எவ்வளவு அழுத்தினாலும், அதிலிருந்து மீண்டு தன் கனவை நோக்கி பயணிக்கும் ஷங்கர்கணேஸ் உடனான நேர்காணல்:

**01. உங்களைப் பற்றிய அறிமுகத்தை வழங்க முடியுமா?**

வணக்கம் எனது பெயர் உதயகுமார் ஷங்கர்கணேஸ் நானுஓயாவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவன் நான் எனது பாடசாலைக் கல்வியை நு/ நாவலர் தமிழ் மகா வித்தியாலயத்தில் நிறைவு செய்தேன் . தற்போது எனது கனவையும் துரத்திக் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

**02. உங்களுக்கு எப்படி இந்த உடற்பயிற்சி போன்றவையில் ஈடுபாடு ஏற்பட்டது ?**

சிறுவயதிலிருந்தே ஆர்வம் என்றெல்லாம் சொல்வதற்கில்லை. சாதாரண தரம் படித்து முடித்த காலப்பகுதியில் தொலைக்காட்சியில் குத்துச்சண்டை பார்த்து ஒரு குத்துச்சண்டை வீரனாக வேண்டும் என்ற ஆர்வம் சற்று தலைகாட்டியது, ஆனால் நான் வசிக்கும் பகுதி சரியான பயிற்றுவிப்பாளர் இல்லாத காரணத்தால் உடம்பையாவது கட்டழகாக வைத்துக்கொள்ள வேண்டும் இதன் மூலம் ஏதாவது சாதித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் ஜிம்மில் சேரத் தீர்மானித்தேன்.

**03. நீங்கள் சந்தித்த சவால்கள் ?**

நிறைய பேர் என்னை விமர்சித்தார்கள் பாடசாலை சென்று படிக்கும் வயதில் எதற்கு இவை எல்லாம் என்று ? இருந்தும் சாதாரண தர பயிற்சியை முடித்து 8 மாதம் ஜிம் பயிற்சிகளைத் தொடர்ந்தேன். மீண்டும் உயர்தரம் செல்ல வாய்ப்பு கிடைத்த காரணமாக ஜிம் பயிற்சிகளை கைவிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

உயர்தர கல்வியை முடித்த பின்னர் நுவரெலியாவில் புசயனெ ர்ழவநட இல் தொழில் செய்து இதிலிருந்து கிடைத்த பணத்தினை வைத்து ஜிம் செல்வதற்கு தேவையான உடை இ விட்டமின்களை வாங்கி பயிற்சிகளைப் தொடர்ந்து இன்று வரை சாதித்துக்கொண்டு இருக்கின்றேன்.

சுமார் ஒரு வருடம் தொடர்ந்து பயிற்சிகளைத் தொடர்ந்தேன் உடல் கட்டழகு மற்றும் உடற்கட்டமைக்கு ஏற்ற இலங்கை இராணுவத்தில் தொழில் வாய்ப்பு கிட்டியது ஆனால் எனது குடும்ப சூழ்நிலை தடுத்து விட்டது. குறிப்பாக சமூகத்தில் ஒரு சிலரின் விமர்சனங்கள் நான் தொடர்ந்து வெற்றிபெறத் தூண்டுதலாக அமைந்துள்ளது.

**04. நீங்கள் இதுவரை பெற்ற பதக்கங்கள் இ வெற்றி என கருதுவது?**

இலட்சியத்தை நோக்கிப் பயணித்து இடைவிடாத முயற்சிகளின் விளைவாக 2015ஆம் ஆண்டு கண்டியில் அரசாங்கத்தால் நடைபெற்ற ஆணழகன் போட்டியில் 65 கிலோகிராம் எடையை தூக்கி இரண்டாவது இடம், 2017ஆம் ஆண்டு நடைபெற்ற Junior ஆணழகன் போட்டியில் 70 கிலோகிராம் எடைப்பிரிவில் இரண்டாம் இடம், 2017ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற சீனியர் ஆணழகன் போட்டியில் 75 கிலோகிராம் எடைப்பிரிவில் மூன்றாவது இடம் இ2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஆணழகன் போட்டியில் 75 கிலோகிராம் எடைப்பிரிவில் இரண்டாம் இடம், 2020ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட ஆணழன் போட்டியில் 75கிலோ கிராம் எடைப்பிரிவில் தங்கப்பதக்கமும் இறுதியாக 2021ஆம் ஆண்டு நடைபெற்ற ஆணழகன் போட்டியில் 72 கிலோகிராம் எடைப்பிரிவில் இரண்டாம் இடத்தினை பெற்றது எனது சாதனைகள், அத்துடன் எனது வாழ்க்கையின் திருப்பு முனையாகவும் இந்த வெற்றிகள் அமைந்தது.

**05. உங்களுக்கு போட்டிகளில் பங்கு பெற உதவி செய்து ஊக்கப்படுத்தியது யார்?**

ஆம், கட்டாயம் நினைவு கூற வேண்டும் எனது பயிற்சியாளர் அமில மற்றும்

நானுஓயா பிரதான நகரில் ரேஹா ஸ்டீல் உரிமையாளர் மரியாதைக்குறிய திருச்செல்வம் அண்ணா போட்டிகளில் பங்குபற்றுவதற்கான செலவுகளுக்கு மாதாந்தம் 20.000ஃஸ்ரீ பணத்தை ஒரு வருடமும் இரண்டு மாத காலத்திற்கு வழங்கி உதவி செய்தார் இச்சமயத்தில் நன்றி கூறி நினைவுப்படுத்துக்கின்றேன் இ மற்றும் இன்னும் பெயர் குறிப்பிடாத பல நல்ல உள்ளங்களுக்கும் நன்றிகள்.

**06. இத்துறையில் உங்கள் வீட்டில் எப்படியான ஒத்துழைப்பு தருகின்றன ?**

இதில் அதிக பங்கு என் அப்பாவுக்கே உண்டு. அப்பா ஆசி பெற்று செல்லும் அனைத்து விடயங்களுமே எனக்கு வெற்றிதான். எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் உன்னால் முடியும் என்று இன்றுவரை என்னுடைய சந்தோஷத்துக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார் மற்றும் அக்கா பரிமளா காந்தி, மாமா நமசிவாயம், முக்கியமாக எனது மனைவி கிருஸ்ணவேனி எவ்வித போட்டிகளுக்கு ஆயத்தமாகும் போதும் அதற்கு ஏற்ற உணவுகளை சமைத்து, என்னை ஆயத்தம் செய்வதிலும் இ ஊக்கப்படுத்துவதிலும் அதிக ஆர்வம் காட்டி வழியனுப்பி வைப்பார் அவர்தான் என் வாழ்வின் வெற்றி.

**07. இத்துறையில் சாதிக்க துடிக்கும் ஆண்களுக்கு நீங்கள் கூறுவது ?**

இத்துறையில் அதிகம் கஷ்டப்பட வேண்டியிருக்கும். மனமும் மூளையும் ஒருங்கே இருக்க வேண்டும் என்னைப் பொறுத்தவரை ஆண்கள் முழு முயற்சியோடு இத்துறையில் ஈடுபட்டால் சாதிக்கலாம். ஆனால் இத்துறையை தேர்வு செய்வது எமது சமுதாயத்தை பொறுத்தவரையில் மிக மிக குறைவாகவே உள்ளது ஆண்களாக பிறந்த அனைவருக்கும் எந்த வகையிலும் ஒரு துறையில் அதிக ஈடுபாடு இருக்கும் இதில் உடல் கட்டழகு மற்றும் உடற்கட்டமைப்பில் ஈடுபாடு உள்ளோர் மன உறுதியும், நம்பிக்கையும் இருந்தால் நாம் எதனையும் சாதிக்கலாம். இதற்காக செயலாற்றும் இளம் தலைமுறையினரை வாழ்த்தி, உற்சாகப்படுத்தி முன்னேற்ற அனைவரும் முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**08. பெறும்பாலும் உடற்பயிற்சி செய்வதை பற்றி அதிக மூடநம்பிக்கைகள் உண்டு அவைகளைப்பற்றி உங்களது கருத்து ?**

ஆம், என்னிடம் அதிகமானவர்கள் உடற்பயிற்சிகாக வருகின்றன ஆண்களும் சரி பெண்களும் சரி திருமணம் செய்யும் காலம் வந்தவுடன் உடற்பயிற்சி செய்வதை நிறுத்தி விடுகின்றன காரணம் உடற்பயிற்சி தொடர்ந்து செய்தால் ஆண்மை குறைந்து இகுழந்தை பாக்கியம் கிடைக்காது என்ற அச்சம் தொடர்ந்து உள்ளதை அவதானிக்க முடிகின்றது இது முதல் மூடநம்பிக்கை . “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்“ என்பர். அத்தகைய நோயற்ற வாழ்க்கை வாழ்வதற்கு ஆரோக்கியமான உணவுடன் அன்றாட உடற்பயிற்சியும் அவசியம் ஆகின்றது, ஆரோக்கியமான உடல் நலத்திற்கும, சில நோய்களை குணப்படுத்தவும் உடற்பயிற்சி உதவும் உணவிற்கு வழங்கும் முக்கியத்துவத்தை உடற்பயிற்சிக்கு வழங்குதல் நன்று.

**09. சைவ உணவு பிரியர்கள் உடல் கட்டுப்பாடாக வைத்திருக்க என்ன செய்ய வேண்டும் ?**

உடலை கட்டழகு உடற்கட்டமைப்பாக வைத்துக்கொள்ள கட்டாயம் அசைவம் சாப்பிட வேண்டும் என்று இல்லை சைவ சாப்பாட்டிலேயே பாதாம், பிஸ்தா, முந்தரி, பேரீச்சம் பழம், பன்னீர் என சத்துள்ள உணவுகள் மற்றும் கீரைவகைகளை உண்டாலே சைவ உணவு பிரியர்கள் தமது உடலை கட்டுப்பாடாக வைத்துக் கொள்ளலாம்.

**10. உங்களது அடுத்தபடியான குறிக்கோள் என்ன ?**

தற்போது நான் யுளூர்குழுசுனு ஹோட்டலில் ஜிம் பிரிவில் பயிற்சியாளராக சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வருகின்றேன்.

எனது அடுத்த குறிக்கோள் நுவரெலியா பிரதான நகரில் உடற்பயிற்சி நிலையம் ஒன்றை திறந்து பயிற்சி வழங்குவதுதான்.

என்னைப் போன்ற அதிகமான ஆண்கள் ஒவ்வொரு துறைகளில் சாதிக்கும்போது பொருளாதார ரீதியாக இலங்கை அரசு உதவி செய்ய வேண்டும். இதற்கு மேலும் பல போட்டிகளில் கலந்துகொண்டு நான் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கையும் மன தைரியமும் எனக்கு உள்ளது.

***


# அதிர்ச்சி தோல்விகளால் அதிரடி முடிவுகள்!

## சூடு பிடிக்கும் ரீ 20 அரையிறுதிகள் புதனன்று ஆரம்பம்



அப்ரித் வஸீர்

விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐசிசி டி20 இருபதுக்கு இருபது தொடர் இறுதி கட்டத்தை அடைந்துள்ளது. சூப்பர் 12 ஆட்டங்கள் இன்றுடன் நிறைவடைந்துள்ளது. நான்கு அணிகள் அரை இறுதிக்குள் நுழைந்துள்ளது. சூப்பர் 12 இல் மொத்தமாக 30 ஆட்டங்கள் நடைபெற்றது. குழு ஒன்றில் நியூசிலாந்து, இங்கிலாந்து



மற்றும் குழு இரண்டில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் அரை இறுதிக்குள் நுழைந்துள்ளது. மிக விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் குழு ஒன்றில் நியூசிலாந்து அயர்லாந்தை வீழ்த்தி அரையிறுதியை உறுதி செய்தது .இங்கிலாந்து அணி இலங்கையை வீழ்த்தி அரையிறுதிக்கு தெரிவாகி அவுஸ்திரேலியாவின் அரையிறுதி கனவினை தகர்த்தது.

இரண்டில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகள் முதலாம், இரண்டாம் இடத்தை பிடித்திருந்தது எனினும் தென்னாப்பிரிக்கா பாகிஸ்தானுடன் அடைந்த தோல்வியை தொடர்ந்து நெதர்லாந்துடன் கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் இன்று களம் இறங்கியது. எனினும் 13 ஓட்டங்களால் நெதர்லாந்து வெற்றி பெற்றது. இந் நிலையில் இன்றைய இரண்டாவது போட்டியான பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் இடையேயான போட்டியில் வெற்றி பெறுகின்ற அணி அரையிறுதிக்குள் நுழையும் வாய்ப்பை பெறுமன தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மிக விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் ஐந்து விக்கட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

**அரையிறுதியில் மோதப் போகும் அணிகள் யார்?**

அரையிறுதியில் மோதப் போகும் அணிகள் யார்?என்ற கேள்வி அனைத்து கிரிக்கெட் இரசிகர்களுக்கும் புரியாத புதிராகவே இருந்தது.அந்தவகையில் தற்போது அதற்கான விடை கிடைத்துள்ளது.

குழு ஒன்றில் நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளும், குழு இரண்டில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளும் தெரிவாகியுள்ளது.புள்ளிவிபரங்களின் அடிப்படையில் குழு ஒன்றின் முதல் அணியும்,குழு இரண்டின் இரண்டாவது அணியும் மற்றும் குழு இரண்டின் முதலாவது அணியும் ,குழு ஒன்றின் இரண்டாவது அணியும் அரையிறுதியில் மோதவுள்ளது.

இருந்தது. மூன்றாவது போட்டியில் நெதர்லாந்தை வெற்றி பெற்று, தென்னாப்பிரிக்காவையும் வீழ்த்தி அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டது எனினும் தென்னாபிரிக்கா மற்றும் நெதர்லாந்து கிடையயான போட்டியில் மழை பெய்து போட்டி கைவிடப்பட வேண்டும் அல்லது நெதர்லாந்து தென்னாபிரிக்காவை வீழ்த்தியே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் இன்றைய ஆட்டம் அமைந்திருந்தது. இந்த ஆட்டம் நெதர்லாந்துக்கு முக்கியமில்லை என்றாலும் 2024 ஆம் ஆண்டுக்கான டி20 தொடரில் நெதர்லாந்து நேரடியாக தகுதி பெறுவதற்கு அவர்களுக்கு இன்றைய ஆட்டம் முக்கியமாக இருந்தது மற்ற பக்கம் நெதர்லாந்தின் வெற்றி பாகிஸ்தானின் அரையிறுதி வாய்ப்பை மேலும் உறுதி செய்வதாக அமைந்தது.அந்தவகையில் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான போட்டியில் பங்களாதேஷை வீழ்த்தி பாகிஸ்தானி அரை இறுதிக்குள் நுழைந்தது.

பாகிஸ்தானின் இந்த முன்னேற்றம் பாகிஸ்தான் இரசிகர்கள் மற்றும் இன்றி அனைத்து கிரிக்கெட் இரசிகர்களுக்கும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.பாகிஸ்தான் அணியினர் ஏனைய அணிகளை விட ஆரம்பத்தில் சரிவதும் பின்பு ”கம் பேக்” கொடுப்பதுமாக

அந்தவகையில் நியுசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் முதலாவது அரையிறுதியிலும்,இங்கிலாந்து மற்றும் இந்திய அணிகள் இரண்டாவது அரையிறுதியிலும் களமிறங்கவுள்ளது.

முதலாவது அரையிறுதி ஆட்டம் நவம்பர் 9ஆம் திகதி சிட்னி கிரிக்கெட் மைதானத்திலும், இரண்டாவது அரையிறுதி ஆட்டம் எதிர்வரும் பத்தாம் திகதி அடலய்ட்டிலும் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரையிறுதியில் தெரிவாகின்ற இரண்டு அணிகளும் எதிர்வரும் 13 ஆம் திகதி மெல்போன் கிரிக்கெட் மைதானத்தில் இறுதிப் போட்டிக்காக களமிறங்க உள்ளது.

**எதிர்பார்க்கப்படாத பாகிஸ்தானின் அரை இறுதி வாய்ப்பு!**

கடந்த வருடம் அரையிறுதியில் அவுஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்து வெளியேறிய பாகிஸ்தான் அணி இந்த முறை பெரிதும் எதிர்பார்ப்புடன் களமிறங்கியது. எனினும் சூப்பர் 12 சுற்று ஆட்டத்தில் இந்திய மற்றும் சிம்பாபேயிடம் அதிர்ச்சி தோல்வியை தழுவியிருந்தது. பாகிஸ்தானின் அரையிறுதி கனவு நொருங்கிப்போனது என்றாலும் கடுகளவு வாய்ப்பு அவர்களுக்கு அவர்களுக்கென்று தனி வரலாறு உண்டு என்று சொல்வதில் ஐயமில்லை.

இதுவரை நடைபெற்ற டி20 உலகக்கிண்ண அரையிறுதி ஆட்டங்கள்!

முதலாவது டி20 உலகக்கிண்ணம் 2007 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்றது.இதில் இந்திய, பாகிஸ்தான்,அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகின.

முதலாவது அரையிறுதியில் பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது டி20 உலகக்கிண்ண அரையிறுதியில் இந்திய மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதின.இதில் இந்திய அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இறுதிப்போட்டியில் இந்திய அணி கிண்ணத்தை கைப்பற்றியது.

இரண்டாவது டி20 உலக கிண்ணம் 2009 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இடம் பெற்றது. இதில் இலங்கை ,மேற்கிந்திய தீவுகள், தென்னாப்பிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகள் அரை இறுதிக்கு தெரிவாகின. முதலாவது அரைஇறுதி ஆட்டம்




பாகிஸ்தான் மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் 7 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இரண்டாவது டி20 உலகக்கிண்ண அரை இறுதியில் இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவு அணிகள் மோதின.இந்த ஆட்டத்தில் இலங்கை அணி 57 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி கிண்ணத்தை கைப்பற்றியது.

மூன்றாவது டி20 உலகக் கிண்ணம் 2010 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவில் நடைபெற்றது.இதில் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகின.

முதலாவது அரையிறுதியில் இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதின.இதில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டம் அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்றது.இதில் அவுஸ்திரேலியா அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணி கிண்ணத்தை கைப்பற்றியது.

நான்காவது டி20 உலகக் கிண்ணம் 2012 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்றது.இதில் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவு அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகின.

முதலாவது அரையிறுதியில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதின.இதில் இலங்கை அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டம் அவுஸ்திரேலியா மற்றும் மேற்கிந்திய தீவு அணிகளுக்கிடையில் நடைபெற்றது.இதில் மேற்கிந்திய தீவு அணி 74 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இறுதிப்போட்டியில் மேற்கிந்திய தீவு அணி கிண்ணத்தை கைப்பற்றியது.

ஐந்தாவது டி20 உலகக் கிண்ணம் 2014 ஆம் ஆண்டு பங்களாதேஷ ில் நடைபெற்றது.இதில் , தென்னாபிரிக்கா, இலங்கை,நியூசிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவு அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகின.

முதலாவது அரையிறுதியில் தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.இதில் நியூசிலாந்து அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவு அணிகளுக்கிடையில் நடைபெற்றது.இதில் இலங்கை அணி 27 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இறுதிப்போட்டியில் இலங்கை அணி கிண்ணத்தை கைப்பற்றியது.

ஆறாவது டி20 உலகக் கிண்ணம் 2016 ஆம் ஆண்டு நடைபெற்றது.இதில், இந்திய, மேற்கிந்திய தீவு, நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகின.

முதலாவது அரையிறுதியில் இந்திய மற்றும் மேற்கிந்திய தீவுகள் மோதின.இதில் மேற்கிந்திய தீவுகள் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதின.இதில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் கிண்ணத்தை கைப்பற்றியது.

ஏழாவது டி20 உலகக் கிண்ணம் கடந்த வருடம் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்றது.

இதில் பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகின.

முதலாவது அரையிறுதியில் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.இதில் நியூசிலாந்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதின.இதில் அவுஸ்திரலியா அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா அணி கிண்ணத்தை வெற்ற பெற்றது.

இதுவரையில் பாகிஸ்தான் அணி 6 முறை அரையிறுதி வாய்ப்பை பெற்றுள்ளது.

இங்கிலாந்து அணி 5 முறை அரையிறுதி வாய்ப்பை பெற்றுள்ளது.

இலங்கை, அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் 4 முறை அரையிறுதி வாய்ப்பை பெற்றுள்ளது.

இந்த முறை அறையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் எவ்வாறு அமையப்போகும் என்பது தொடர்பில் கிரிக்கெட் இரசிகர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.பொறுத்திருந்து பார்ப்போம் ஆட்டம் எவ்வாறு திசை திரும்பப் போவது என்பதை.



# இம்ரான் மீது தாக்குதல்: அதிகாரத் திமிரின் உச்சக் கட்டம்

## வலுக்கும் கண்டனங்கள்







அப்ரா அன்சார்

பாகிஸ்தானின் வசீராபாத்தில் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தலைமையில் அரசுக்கு எதிராக பேரணி கடந்த நவம்பர் 3 ஆம் திகதி நடத்தப்பட்டது. பேரணியின் போது இம்ரான் கான் திறந்த வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். சபராலி கான் சவுக் என்ற இடத்தில் பேரணி சென்ற போது அவர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.இதில் இம்ரான் கானின் காலில் காயம் ஏற்பட்டதுடன், அவரது கட்சியினரான பிடிஐ யில் சிலரும் காயமடைந்தனர். துப்பாக்கிச் சூடு சம்பவத்தை தொடர்ந்து இம்ரான் கான் பாதுகாப்பாக குண்டு துளைக்காத வாகனத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் .மேலும் இச் சம்பவத்தின் பின்னர் பாகிஸ்தானில் பாரியளவில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் நிலைமையை கட்டுப்படுத்த ஏராளமான பாலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இம்ரான் கான் மருத்துவமனையில் இருந்தவாறு வீடியோ ஒன்றை வெளியிட்டு பேசியுள்ளார். அதாவது தன் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளார்கள் என்ற விஷயம் தனக்கு ஒரு நாள் முன்பே தெரியும் எனவும் மேலும் தன் மீது நான்கு தோட்டாக்கள் பாய்ந்து உள்ளது என்றும் இம்ரான் கான் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் அரசுக்கு எதிராக எதிர்கட்சிகளால் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் ஆட்சி கவிழ்ந்து பிரதமர் பதவியிலிருந்து இம்ரான் நீக்கப்பட்டார். அதனை தொடர்ந்து பாகிஸ்தானின் புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீஃப் பதவியேற்றார். ஷெஃபாஸ் ஷெரீஃப் பிரதமராக பதவியேற்ற நாள் முதலே பாகிஸ்தான் அரசு முன்னாள் பிரதமர் இம்ரான் காணுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி வந்தது.

இஸ்லாமாபாத்தில் போராட்டம் நடக்கப் போவதாக அறிவித்த பின்னர் கடைசி நேரத்தில் போராட்டம் இம்ரான் கானினால் கைவிடப்பட்டது. தேர்தல் அறிவிக்கப்பட்டால் பாகிஸ்தானில் உள்நாட்டு போர் ஏற்படும் என எச்சரிக்கை விடுத்திருந்தார். மேலும் தன்னை கொல்ல சதித்திட்டம் தீட்டி இருப்பதாகவும் இம்ரான் கான் கூறி வந்தார். இந்த நிலையில் இம்ரான் கானின் கட்சியை சேர்ந்த எம் .பி அதாவுல்லா,

பிரதமர் ஷெபாஸ் ஷெரீபின் அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பாக கடந்த காலங்களில் ட்விட்டரில் பேசியிருந்த அதாவுல்லா "இம்ரான் கானின் தலைமுடி பாதிக்கப்பட்டால் கூட, உங்கள் குழந்தை உட்பட நீங்கள் யாரும் இருக்க மாட்டீர்கள் ,உங்களை சும்மா விட மாட்டேன் உங்கள் மீது தற்கொலை படை தாக்குதல் நடத்தும் முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன் இதனை செய்ய ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தயாராக உள்ளனர் என எச்சரிக்கை விடுத்திருந்தார். மேலும் இதே போல் இம்ரான் கானுக்கு எதிராக எது நடந்தாலும் அது பாகிஸ்தான் மீது நடத்தப்படும் தாக்குதலாகவே கருதப்படும். அதற்கு பதிலடியும் பயங்கரமானதாகவே இருக்கும் என இம்ரான் கான் ஆதரவாளர் ஹசன் ரியாசி கூறியிருந்தார்.

இம்ரான் கான் மீதான தாக்குதலை கண்டித்து அவரது கட்சியினர் மற்றும் பொதுமக்கள் நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இம்ரான் கான் லாகூரில் உள்ள வேறொரு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது. அவர் நலமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். எக் காரணத்தாலும் போராட்டத்தை கைவிட மாட்டோம் என இம்ரான் கட்சியின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். இது குறித்து கட்சி நிர்வாகிகள் கூறியதாவது,

இம்ரான் கானை ஒழித்து கட்டுவதற்காக திட்டமிட்டு நடத்தப்பட்ட அரசியல் சதி , தானியங்கி துப்பாக்கியால் மிக அருகிலிருந்து சுட்டுள்ளனர். பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், உள்துறை அமைச்சர், சனதுல்லா ,ராணுவ அதிகாரி ஃபைசல் நாசிர் ஆகியோர் தான் இந்த சதிக்கு மூளையாக செயல்பட்டுள்ளனர். இவர்களை பதவி நீக்காத வரை எந்த விசாரணையும் நேர்மையாக நடக்காது என்று அவர்கள் கூறினார். இந் நிலையில் இம்ரான் மீதான தாக்குதல் குறித்து விசாரிக்க உயர்மட்ட குழுவை அமைக்கும் படி பஞ்சாப் மகாணா அரசுக்கு பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. இது மோசமான படுகொலை முயற்சி என ஜனாதிபதி ஆரிஃப் ஆல்வி தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் குறித்து பாலீசார் கூறியதாவது,

இம்ரான் கான் மீது தாக்குதல் நடத்தியவர் பெயர் நவீத் முகம்மத் பஷீர் ஆவர். இவரிடம் நடத்திய விசாரணை அடிப்படையில் அவருக்கு துப்பாக்கி மற்றும் குண்டுகள் விற்பனை செய்த மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீதான துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

உலக கோப்பை டி20 போட்டியில் பங்கேற்றுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் பாபர் அசாம் தனது ட்விட்டரில், இம்ரான் கான் மீதான இந்த கொடூரமான தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாகவும், அல்லாஹ் தான் பாகிஸ்தானை பாதுகாக்க வேண்டும் எனவும் பதிவிட்டுள்ளார். இதேபோல் முன்னாள் பாகிஸ்தான் அணித் தலைவர் வசீம் அக்ரம், தனது ட்விட்டர் பக்கத்தில், வஜீராபாத்தில் நடந்த நிகழ்வை நினைத்து கவலையடைகிறேன், இம்ரான் மற்றும் அங்குள்ள அனைவருக்காகவும் பிரார்த்தனை செய்கின்றேன். இந்த சமயத்தில் ஒரு நாடாக நாம் ஒன்று பட வேண்டும் நமது தேசிய ஒற்றுமையை சிதைக்க யாரையும் அனுமதிக்க கூடாது என தெரிவித்துள்ளார்.

மேலும் முன்னால் வீரர் ஷெ ாய்ப் அக்தார், இம்ரான் கான் மீது தாக்குதல் நடத்தப்பட்டு இருப்பதை கேள்விப்பட்டேன். அல்லாஹ்வின் அருளால் அவர் நலமாக உள்ளார். இந்த தாக்குதல் கண்மூடித்தனமானது, இதனை கடுமையாக கண்டிக்கின்றேன் என வீடியோ பதிவொன்றின் மூலம் தெரிவித்துள்ளார். மேலும் முகம்மத் ஹபீஸ் தனது ட்விட்டர் பக்கத்தில் இம்ரான் கான் மீதான தாக்குதலை கடுமையாக கண்டிக்கின்றேன். அவர் பாதுகாப்பாக இருக்க வேண்டும் விரைவில் மீண்டு வர வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதல் குறித்து இந்தியா,

இது ஒரு நடந்து கொண்டிருக்கும் நிகழ்வு, இதை நாங்கள் கூர்ந்து கவனித்து வருகிறோம். தொடர்ந்து இதைக் கண்காணிப்போம். இதற்கு மேல் இதில் சொல்வதற்கு ஒன்றுமில்லை," என்று இம்ரான் மீதான துப்பாக்கிச் சூடு குறித்து இந்திய வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்ஷி டிவிட்டரில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த தாக்குதலுக்கு எதிராக பாகிஸ்தானில் மட்டுமன்றி முழு உலக நாடுகளும் தமது கண்டனத்தை தெரிவித்து வருகின்றது.குறிப்பாக இலங்கையில் இம்ரான் கான் பூரண சுகம் பெற வேண்டும் என மக்கள் பிரார்த்தித்து வருகின்றனர்.இலங்கையின் இக்கட்டான நிலைகளில் இம்ரான் கான் பல்வேறு உதவிகளை செய்துள்ளார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இம்ரான் கான் பாகிஸ்தான் பிரதமராகத் தெரிவானார். ஊழலுக்கு முடிவு கட்டுவதாகவும், பொருளாதாரத்தை சீரமைப்பதாகவும் கூறி அரசியலில் ஒரு புதிய சக்தியாக அவர் எழுச்சி பெற்றார்.பெரும் அளவிலான மக்கள் ஆதரவு அவருக்கு இருந்தது. அதே போல பாகிஸ்தானில் அதிகார அமைப்பு என்று குறிப்பிடப்படும் அல்லது ராணுவத்தின் மறைமுக ஆதரவும் அவருக்கு இருந்தது.

"அவர்களால் அவர் உருவாக்கப்பட்டார்," என இம்ரான் கட்சியில் இருந்து விலகிய முன்னாள் உறுப்பினர் ஒருவர் ஊடகங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். "அவர்கள் தான் அவரை அதிகாரத்துக்குள் கொண்டு வந்தனர்," என்றும் அவர் கூறியிருந்தார்.

ஆனால், உயரும் பணவீக்கம், வெளிநாட்டு கடன் ஆகியவற்றின் காரணமாக பொதுமக்கள் இடையே அவருக்கான ஆதரவு சரிந்தது. அவர் பொருளாதாரத்தை தவறாக கையாள்கிறார் என்ற தொடர் குற்றச்சாட்டுக்கும் உள்ளானார். தவிர பாகிஸ்தானின் சக்திவாய்ந்த ராணுவத்துக்கும் அவருக்குமான உறவில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பாகிஸ்தான் உளவு அமைப்பு ஒன்றின் புதிய தலைவர் நியமனத்துக்கான கோப்பில் கையெழுத்திட இம்ரான் கான் மறுத்ததும் அவரது வீழ்ச்சிக்கான காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ராணுவத்துக்கும் இம்ரான்கானுக்கும் இடையிலான உரசலை எதிர்கட்சிகள் பிடித்துக் கொண்டன. 2022 மார்ச் மாதம் அவரது ஆதரவு எம்பிக்கள் தொடர்ந்து பதவி விலகியதால், அது அவரது நாடாளுமன்ற பெரும்பான்மையை பாதித்தது.

எனவே எதிர்கட்சிகள் அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டு வந்தன. ஆனால், இம்ரான்கானோ நாடாளுமன்றத்தை கலைக்க முடிவு செய்தார். உடனடியாக தேர்தலும் அறிவிக்கப்பட்டது. ஆனால், அவர் அரசியலமைப்பு சட்டத்துக்கு மாறாக செயல்பட்டதாக பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.இதையடுத்து கடந்த ஏப்ரல் மாதம் அவரது பதவி பறிபோனது.எனினும் மக்கள் ஆதரவு இம்ரானுக்கு தொடர்ந்து கிடைத்துவருகின்றது இதனாலே பாகிஸ்தான் அரசு தேர்தலை மிக விரைவாக வைத்து இம்ரானை ஓரம் கட்ட சதிசெய்கின்றது என்பதே மறைக்கப்பட்ட உண்மை.



